**தீபகத்திலிருந்து...**

இறையாசீர்!

இறையேசுவில் அன்புக்குரியவர்களே, தவக்காலத்தில் நுழைந்துவிட்டோம். இறையன்பின் ஆழத்தையும், மன்னிப்பின் மாண்பையும், மனமாற்றத்தின் முக்கியத்துவத்தையும், நம்பிக்கையின் உண்மை வாழ்வையும், கிறிஸ்தவ அழைப்பின் அழகையும், இறை சமூகத்திற்குரிய ஆன்மீகத்தையும் இவையனைத்திலும் இறையோடும், பிறரன்பையும் ஆணித்தரமாக முன்னிறுத்தும் காலம் இது.

சொல்ல சொல்ல மதிக்காத பிள்ளை, தன் விருப்பத்திற்கு மாறாக நடக்கும் பிள்ளை, எத்தனை வாய்ப்புகள் கொடுத்தாலும் மாறாத பிள்ளை-இப்படிப்பட்ட ஒரு பிள்ளையை கண்டு ஒரு தாயின் மனநிலை என்னவாக இருக்கும்? குறையாத அன்பும், மறவாத கனிவும், நீங்காத பாசமும், மாறிவிடுவான் என்ற ஏக்கமும், கைவிடாத பரிவும் என்றும் தன் குழந்தையாகவே காணும் ஈரமும் மேலோங்கி நிற்பதே தாயுள்ளம். இந்த தாயுள்ளத்தின் முன்னோடி, இந்த தாயுள்ளத்தின் குணங்களை பல்லாயிரம் மடங்கு தன் குணமாய் கொண்ட இறையுள்ளத்தை உய்த்துணர அழைக்கும் காலம் தவக்காலம்.

இந்த தவம் செபம் இவற்றிற்கு மத்தியிலே திருச்சபை நம்மை இரண்டு விழாக்களை கொண்டாட அனுமதிப்பது மட்டுமல்ல, ஆர்வமாய் அழைக்கிறது. காரணம், இவ்விருவரும் நமக்கு தரும் மாபெரும் சாட்சியமே. இவ்விருவர் யாரென்று நாம் நன்றே அறிவோம்.

எளிமையிலும், கீழ்ப்படிதலிலும், துன்பங்களை கண்டு துவண்டுவிடாமல் ஏற்பதிலும் உழைப்பிலும், உண்மையிலும் உயர்ந்து விளங்கும் தூய வளனார் ஒருவர். இறைசித்தம் என்ற ஒரே காரணத்திற்காக புரியாத போதும் பயம் சூழ்ந்த போதும், முழு உள்ளத்தோடு "ஆம்" என்று கூறி தன்னையே அடிமையாய் இறைவனின் கைகளில் சரணாக்கிய இறைவனின் தூய மகளாம் நம் மீட்பரின் தாய் மரியாள் மற்றொருவர்.

இவர்களது சாட்சியமும், தவக்காலத்தின் சவாலும் நம் கிறிஸ்தவ வாழ்வின் முழுமையை நோக்கிய அழைப்புகள் என்பதை உணர்ந்து இந்நாட்களை வாழ்வோமா!

அன்புடன்

அந்தோணி கிறிஸ்டி சச.,

# பகுதி 1 வழிபாட்டு வழிக்காட்டி

**01.03.2016 திருநீற்று புதன்** **திருப்பலி**

திருமதி. டிலைலா சேவியர்

"தந்தையே உம் இல்லம் நோக்கி வருகிறேன், திறந்த உந்தன் அன்பில் இணைய திருந்தி வருகிறேன்"

**முன்னுரை**

இறை இயேசுவில் அன்புள்ளவர்களே, நாம் அனைவரும் கடவுளின் எல்லையற்ற அன்பிலும் இரக்கத்திலும் பங்குபெற அழைக்கப்பட்டவர்கள். ஆனால் நமது தீச்செயல்களாலும், பாவ வாழ்க்கையாலும் அந்த நிலையிலிருந்து பிரிந்து சென்றுவிட்டோம். இறைச்சாயலில் படைக்கப்பட்ட நம்முடைய சொல்லும் செயலும் இறைவனையே நாடி இருக்க வேண்டும். ஆனால் பல சமயங்களில் நம் இதயத்தை கள்வர் குகையாக மாற்றிவிடுகிறோம். நாம் பாவம் செய்து இறைவனை விட்டு விலகி சென்றாலும் இறைவனின் மனதை புண்படுத்தியிருந்தாலும் அவர் நம்மை உதறித்தள்ளாமல் நமக்கு புதுவாழ்வு தருவதற்காகவும், நம் பாவங்களை கழுவுவதற்காகவும், அன்பே உருவான இறைவன் தன் ஒரே அன்பு மகனை கல்வாரி பலியாக்கினார். பாடுகளும், வேதனைகளும், கசையடிகளும், தூய இரத்தமும் நிறைந்த கல்வாரி பலியினால் நம்மை தூய்மையாக்க மனம்மாற இறைவனின் அன்பில் பங்குபெற மீண்டும் அழைப்பு விடுக்கிறார்.

அதற்காகத்தான் மீண்டும் ஒரு தவக்காலம், இது ஒரு அருளின் காலம். அளவற்ற அன்பினால் தன்னை நமக்காக கையளித்த அவரது அன்பினை உணரும் காலம். புனிதமான இந்த தவக்காலத்தை நமக்கு நினைவூட்டவே இன்றைய "திருநீற்று" புதன் என்று திருச்சபை நமக்கு அறிவுறுத்துகிறது. நமது நெற்றியில் சாம்பல் பூசப்பட்டு நாமனைவரும் நிலையில்லா இவ்வுலகிலிருந்து நிலையான விண்ணக வாழ்வை நோக்கி செல்லும் காலத்தை நினைவுப்படுத்துகிறது.

இத்தவக்காலத்தில் முதலாவது நாம் நினைவில் கொண்டு வருவது, நம்மை நாம் பாவிகள் என்று ஏற்றுக்கொள்வதுதான். ஏற்றுக்கொண்ட அதே மனநிலையோடு மனமாற்றத்திற்கான நற்காரியங்கள் செபம், தபம், ஈகை போன்றவைகளை செயல்படுத்துவோம். முறிந்துபோன உறவுகளை மீண்டும் இறைவனோடு மட்டுமல்லாமல் மக்களோடும் புதுப்பித்து ஒன்றிணைவோம். நல்ல ஒப்புறவு பெற்று இறைவனின் மன்னிப்பை அடைந்து நம்மை நாமே புதுப்பித்து கொள்ள இத்தவக்காலத்தை பயனுள்ளதாக்குவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

தியாகத் திருவுருவே இறைவா, நீர் ஏற்றுக்கொண்ட சிலுவைச்சாவு எம்மீது கொண்ட அளவற்ற அன்பின் உச்சமாக மாறியது. திருச்சபை வழிநடத்தும் அனைத்து துறவறத்தாரும் அவர்கள் எதிர்கொள்ளும் சிலுவைகளை நேர்மறையாகக் கண்டு அவற்றின் வழியாக தங்களுக்கு வரும் துன்பங்கள், பிரச்சனைகள், எதிர்ப்புகள் போன்றவைகளை இயேசுவின் பாடுகள் பாதுகாக்க வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

சிலுவைச் செம்மலே இயேசுவே, நாங்கள் எதை மாற்றவேண்டும், எதை ஏற்க வேண்டும் என்று நீர் வாழ்ந்து காட்டியுள்ளீர். உம்மைப்போல நாங்களும் தன்னலம் பாராமல் பிறருக்காக தியாகங்கள் செய்யவும், எங்கள் வாழ்வின் எதார்த்தங்களை ஏற்றுப் பிறருக்கு வாழ்வு கொடுப்பவர்களாக மாறிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

சிலுவை நாயகனே இறைவா, எங்கள் வாழ்வில் ஏற்படும் துன்ப துயங்கள், பொருளாதார பிரச்சனைகள், வறுமை, ஏழ்மை, கவலை, சோகம் போன்றவற்றில் மாற்றக் கூடியவற்றை மாற்றவும், மாற்ற இயலாதவற்றை ஏற்றுக்கொண்டு மகிழ்வோடு வாழவும் வரம்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**03.03.2017 தவக்கால  முதல் வெள்ளி** **திருப்பலி**

திரு. ஜான் அலெக்சாண்டர்

**விசுவாசிகளின் மன்றாட்டு**

தூய்மையின் திருஉருவே இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கையாகவும் சோர்வுற்றோருக்கு பலமாகவும், வழிதவறியோருக்கு நல்வழிகாட்டியாகவும் திகழ்ந்து உமக்காக வாழும் வரத்தை தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

உமது வார்த்தையை உலகுக்கு எடுத்துரைக்க இறைவாக்கினரை ஏற்படுத்துகின்ற இறைவா, உம் வாக்கை அன்புடனும் தாழ்ச்சியுடனும் கேட்டுக் கீழ்படியும் மக்களாக நாங்கள் வாழ உம்மை மன்றாடுகிறோம்.

மனிதரால் புறக்கணிக்கப்பட்ட இறைவா, உம்மை அறியாத மக்களால் நாங்கள் புறக்கணிக்கப்படும் போது அவர்களை வெறுக்காமல் அவர்களுக்காக மன்றாடும் மனதை தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்

அனைத்திலும் சிறந்தது அன்பே என்பதை அறியும் நாங்கள் உண்மையான அன்பின் மக்களாக வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்

ஏழை, எளிய, ஆதரவற்ற, கைவிடப்பட்டோர், இன்னலுறுவோருக்கு உமது அன்பை அளிக்கும் தாராள மனதை எங்களுக்கு தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**05.03.2017 தவக்காலம் முதல் ஞாயிறு** **திருப்பலி**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

"இறை வார்த்தையை வாளாகக் கொண்டு அலகையை வெல்வோம்"

தவக்காலத்தின் முதலாம் ஞாயிற்றுக் கிழமையை அருளின் காலமாக நாம் தொடங்கியுள்ளோம். இறைத் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவது தான் உண்மையான நோன்பு என்பதை இயேசுவின் செயல்பாடுகளிலிருந்து அறிகின்றோம். ஆகவே இறைவனின் பிள்ளைகளாய் உள்ள நாம் ஆணவத்தை விடுத்து, தாழ்ச்சியை கடைபிடிப்போம்.

ஆண்டவர் இயேசு தீயோனால் சோதிக்கப்படும் போது இறைவார்த்தையைக் கொண்டே சாத்தானை வீழ்த்துகிறார். இறைவனின் பிள்ளைகளாகிய நம் ஒவ்வொருவருக்கும் பல்வேறு சோதனைகள் பல வழிகளில் வரலாம். அந்த நேரத்தில் நாம் நம்மை மட்டுமே நம்பியிராமல் இறைவனின் துணையை நாடுகிறபோது சோதனைகளை வெற்றி கொள்ளலாம்.

கடவுளை இதயத்தில் சுமந்து அவர் திருவுளத்தை மட்டும் செயல்படுத்தும் இயேசு அவருக்கு எப்போதும் கீழ்ப்படிந்து நம்பிக்கைக்குரியவராய் இருக்கின்றார். சோதனைகள் மனித வாழ்வில் அன்றாடம் வருவது இயல்பு, பல வேளைகளில் நாம் அவைகளில் விழுந்து விடுவதும் உண்டு. அவை பழக்கமாகி விட்டால் நமக்கு அவை பெரிய தீமையாக தெரியாது மேலும், சோதனைகளை வென்று வெற்றிகாண வேண்டும் என்ற முனைப்பும் துடிப்பும் நம்மிடம் இல்லாமல் போய்விடும். இயேசுவைப் போன்று நாற்பது நாள் இரவும் பகலும் நோன்பிருந்தும்  மனதில் கடவுளை தியானித்து வாழும் பழக்கம் நமக்கிருப்பின் நாமும் எல்லா சூழ்நிலைகளிலும் கடவுளை முன்னிலைப்படுத்தி வெற்றி காணுவோம்.

இன்று சாத்தானின் ஆதிக்கம் அதிகம் இருப்பதற்கு முக்கிய காரணம், மனித பலவீனம்தான். ஆன்மீக வாழ்க்கையில் நமது விசுவாசம் வலிமை பெற்றால் பலவீனத்தை வெல்லலாம் இயேசுவைப் போல பாலைவன அனுபவம் நாமும் பெற வேண்டும். அலகையை அகற்றத் தேவையான சக்தியை இறைவார்த்தை நமக்குத் தரும்போது வான தூதர்கள் நமக்கும் பணிவிடை செய்யத்

தயாராயிருக்கிறார்கள். எனவே இறைவார்த்தையை வாளாகக் கொண்டு அலகையை வெல்வோம் என உறுதியெடுத்து இன்றைய திருப்பலியில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. எங்களுக்காக மனிதனாக வாழ்ந்து சிலுவை மரணம் ஏற்ற இறைவா உம் அடிச்சுவட்டில் திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவியர், பொதுநிலையினர் அனைவரையும் நெருக்கடியான சூழ்நிலையில் தடுமாற்றம் இல்லாத விசுவாசத்தில் வழிநடத்திடத் தேவையான வரமருள உம்மை மன்றாடுகின்றோம்.
2. உலகம் காட்டும் வழியை விடுத்து நீர் காட்டும் வழியில் வாழ அழைக்கும் இறைவா உலகில் வன்முறை நடைபெறும் இடங்களில் அடிப்படை வசதிகளின்றி கொடுமையான சூழ்நிலையில் உயிர்பிழைக்க வழியின்றி வாழ்ந்து வருகிறார்கள். நாட்டையாளும் தலைவர்கள் தற்பெருமையை விடுத்து தாழ்ச்சியை கடைபிடித்து நமது ஆட்சி மக்களாட்சி என அக்கறை கொண்டு அவர்களைப் பேணிக்காத்திடத் தேவையான பரந்தமனதை ஆட்சியாளர்களுக்கு தந்து உதவ உம்மை மன்றாடுகின்றோம்.
3. "கிறிஸ்து உன்னில் இருக்கிறார். அவரே மகிமையின் நம்பிக்கை" எனும் விசுவாச வாழ்வில் வாழ்ந்திட அழைக்கும் இறைவா, நற்கருணை நாதரை என்றென்றும் இதயத்தில் அமரவைத்து அவர் அருளிலும் வழிகாட்டுதலிலும் நடந்திடத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

**10.03.2017 தவக்காலம் 2ம் வெள்ளி**

திரு. ஜான் சுரேஷ்

**விசுவாசிகளின் மன்றாட்டு**

நல்லாயனே எம் இறைவா, திருச்சபையை வழிநடத்தும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவருக்காக மன்றாடுகிறோம். இவர்களுக்குத் தேவையான அனைத்து அருள்வரங்களையும் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

சமாதானத்தின் இறைவனே, தவக்காலத்தில் இருக்கும் நாங்கள் அனைவரும் எங்கள் சகோதர சகோதரிகளோடு உள்ள பகையை முற்றிலுமாக ஒழித்து, மனமாற்றத்தோடும் அன்போடும், எல்லோருடனும் சேர்ந்து உமது வழியை செம்மையாக மாற்ற உதமருளை பொழிந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

அமைதியின் தெய்வமே உலகமக்கள் அனைவருக்காகவும் மன்றாடுகிறோம். எங்கள் நாட்டிலும் எங்கள் குடும்பங்களிலும் அமைதி நிலைபெற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

மனிதம் மீட்பு பெற உம் அன்பார்ந்த மகனையே பலியாக வழங்கிய இறைவா, இத்தவக்காலத்தில் நாங்கள் எங்கள் பாவநிலையை உணர்ந்து நீர்கொடுக்கும் நிறைவாழ்வின் மீட்பை உரிமையாக்கிக்கொள்ள அருள்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**12.03.2017 தவக்காலம் 2ம் ஞாயிறு** **திருப்பலி**

திருமதி. பத்மாவதி

**முன்னுரை**

இயேசுவின் பாடுகளின் 2ம் ஞாயிறாகிய இன்று நாம் தொடக்க நூலில் ஆபிரகாம் ஆண்டவரின் அழைப்பிற்கு கீழ்ப்படிந்து விண்ணகத் தந்தைக்கு நம்பிக்கைக்குகந்தவரானதுபோல் பவுலடியாரின் அழைப்புக்கு செவிசாய்ப்போம், சான்று பகர்வோம். இயேசுவின் சகோதரர்களாக விண்ணகத்தந்தையின் மக்களாக இத்தவக்காலத்தில் மனிதனின் சுருங்கிப்போன மனதினை விரிவாக்கவும், சுயநலத்தால்,

ஆணவத்தால், அதிகாரத்தால் தேங்கிய குட்டையான மனதினை ஓடும் நீரோடையாக மாற்றவும் செயல்படுவோம்.

சிலுவையின்றி உயிர்ப்பு இல்லை. துன்பமின்றி இன்பமில்லை என்பதினை உணர்ந்து வாழ இறைவன் அழைக்கின்றார். பவுலடியார் கூறுவதுபோல இயேசுவுக்கு சான்று பகர வெட்கப்பட தேவையில்லை. இத்தவக்காலத்தில் எம் கடமைகளை முழு உள்ளத்துடன் செய்து இயேசுவின் பிரசன்னத்தில் விண்ணக தந்தையின் மக்களாக வாழ்வோம் எனும் மனவுறுதியுடன் இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

அன்பின் தேவனே, நீர் எமக்களித்துள்ள உமது சீடர்களாகிய எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரையும் இறையாற்றலில் சிறந்து சீரிய உள்ளத்துடன் செயல்பட வழிநடத்துமாறு உம்மை மன்றாடுகிறோம்.

இரக்கத்தின் தந்தையே, இத்தவக்காலத்தில் எங்கள் குற்றங்களையும், குறைகளையும் விட்டுவிட்டு சிலுவையின் பாதையில் திருந்திய மனதுடன் வழிநடக்கவும், பிறரையும் வழிநடத்தவும் நல்ல ஆற்றலை அளிக்குமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

அருளின் ஊற்றே இறைவா, இவ்வுலகில் பிளவுபட்டு துன்பங்களில் சிக்கி தவிக்கும் குடும்பங்களை சமர்ப்பிக்கின்றோம். நீர் உமது தூதுவர்களை அனுப்பி குடும்பங்களில் கணவன்,மனைவியரின் எண்ணங்களை ஒருநிலைப்படுத்தி இறைவழியில் வழிநடத்தும்படி உம்மை மன்றாடுகிறோம்.

## 17.03.2017 தவக்காலம் 3ம் வெள்ளி

திருமதி. டிலைலா சேவியர்

**விசுவாசிகளின் மன்றாட்டு**

தாயும் தந்தையுமான இறைவா, உமது அளவற்ற அன்பினைப் புறக்கணித்து எங்களது குற்றங்களால் உம்மைக் காயப்படுத்திய தருணங்களுக்காக உமது மன்னிப்பை வேண்டுகிறோம். இனி சுயநலம், பேராசை, வன்முறை, சாதி சமய உணர்வு போன்றவற்றால் பிறரை அச்சுறுத்தாமல் உமது அன்பில் நிலைத்து, பிறரையும் அன்பு செய்யும் வரம் தருமாறு உம்மை மன்றாடுகிறோம்.

நன்மையின் ஊற்றே இறைவா, வாழ்வுதரும் வார்த்தைகள் பேசவும், நலம்தரும் நற்செயல்களில் நாங்கள் ஈடுபடவும், நல்லவற்றையே சிந்தித்து, நேர்மையான வழிகளில் எங்களது வாழ்வுப் பாதையை வகுத்துக்கொள்ளும் வரம் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

விண்ணிற்கும் மண்ணிற்கும் அரசரே எம் இறைவா, இம்மண்ணில் ஆட்சி செய்கின்ற தலைவர்களை ஆசீர்வதியும் இவர்கள் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து மக்களின் வாழ்வு மேம்படவும், மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றவும், தங்களால் முடிந்தவரை பிறர்நலத்தோடும், தியாக மனதோடும் உழைத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 19.03.2017 தவக்காலம் 3ம் ஞாயிறு **திருப்பலி**

திரு. D.V.R. ராஜா

**முன்னுரை**

மனிதரின் பாவத்தால் துண்டிக்கப்பட்ட இறை மனித உறவைப் புதுப்பித்துக்கொள்ள தவக்காலங்களில் முயற்சி செய்கிறோம். பழங்காலத்தில் பாவக் கழுவாய் சடங்குகள் நிறைவேற்றினர். இதை லேவியர் ஆகமத்தில் காணலாம். ஆனால் ஆட்டுக்கிடாய் இரத்தம் போதுமானதாய் இல்லை, எனவே மீட்பின் திட்டத்தில் இயேசு இவ்வுலகில் வந்தார் தன் வாழ்நாள் முழுதும் இறையரசின் போதனைகளையும் இறைவனின் மகிமையையும் பறைசாற்றினார்.

யூதர்களே உயர்ந்தவராக, சமாரியர்களை இழிவாக எண்ணிய காலத்திலே இயேசு, பாவிகள் என்று எண்ணப்பட்ட அநேகரின் இல்லம் சென்று உறவாடி விருந்துண்டார். காரணம், இறைவன் பாவிகளை

வெறுக்கவில்லை பாவத்தை மட்டுமே வெறுக்கிறார். எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையை இழந்தார்கள். பாவம் செய்யாத ஒருவனும் இல்லை என விவிலியத்தில் காண்கிறோம். அப்படியிருக்க, நல்லவர் ஒருவருக்காக என்றாலும் எதையாகிலும் செய்யலாம். ஆனால் நாம் பாவிகளாய் இருந்த போதே நமக்காக கிறிஸ்து மரித்தார். எனவே இன்றைய வாசகங்களில் நற்செய்தியில் உள்ளதுபோல மோசே வழிநடத்தி மக்கள் அவ்வப்போது முணுமுணுத்தும் நான் அரசன் வாக்குக் கொடுத்துவிட்டேன் என்றும் அதை நிறைவேற்ற வேண்டுமென்றும் மண்ணுலகில் திருமுழுக்கு யோவானைப்போல் இதற்கு முன்பும் இனியும் சிறந்த ஒருவர் இல்லை என இயேசுவே சான்றளித்த ஒரே மனிதரை ஏரோது நொடியில் கொன்றதுபோல நாமும் இராமல், சில நூற்றாண்டுகளுக்கு முன் ஒப்புரவு அருட்சாதனம் ஒருமுறை மட்டுமே வழங்கப்பட்டது. இதனால் மனிதர் தன் வாழ்நாளின் இறுதிநாள் வரை காத்திருக்க வேண்டியிருந்தது.

ஆனால் மனிதன் இறைவனோடு ஒன்றியிருக்க வேண்டும் என்பதால் அது தளர்த்தப்பட்டது. இதனால் எத்தனை முறை வேண்டுமானாலும் ஒப்புரவு செய்துக்கொள்ளலாம் என்றும் பாவக் குழியில் உழலாமல் செய்த பாவத்திற்கு மனம் வருந்தி அதைவிட்டு விலகி அதற்கேற்ற சூழ்நிலைகளைச் சந்தித்து பரிசுத்தமான இறைவனின் நிரந்தர திருமக்களாய் வாழ துணை வேண்டி இத்திருப்பலியில் முழுமனதுடன் பங்கேற்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

**திருச்சபைக்காக மன்றாடுவோம்.** திருச்சபையை வழிநடத்தும் எமது திருத்தந்தையின் உடல் உள்ள நலனை இறைவன் பாதுகாத்து முதுமையில் வல்லமை தருவேன் எனும் இறைவனின் வாக்கு இவரில் தொடர்ந்து நிலைத்திருக்கவும், உடன் உழைப்பாளர்களான கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள் நலன்களையும் பாதுகாக்கவும் தொடர்ந்து இவர்கள் திருச்சபையின் தலைவரோடு ஒருமித்தக் கருத்தோடு செயல்பட்டுத் திருச்சபைக்கு வலுசேர்க்க இறைவன் நல்லாற்றலும் வல்லமையும் தரவேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நாட்டுத்தலைவர்களுக்காக மன்றாடுவோம்.** எமது மாநிலத்தில் அரசியல் சூழலில் மக்கள் நலம் கருதாத சுயநலமும் மக்கள் விரோதப் போக்கையும் ஆட்சியாளர்களும் அரசியல்வாதிகளும் இத்தகைய போக்கை கைவிட்டு வாக்களித்த மக்களுக்கு விசுவாசமுள்ளவர்களாகவும் நன்றியுள்ளவர்களாகவும் விளங்கி நாட்டு நலன் மக்கள் நலன் காக்கும் நல்லாட்சி விளங்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**பங்கு மக்களுக்காக மன்றாடுவோம்.** எம் மக்கள் இறைவனோடு ஒன்றித்து இறை நம்பிக்கையில் வளரவும் வார்த்தையாக வந்த தேவனை வாழ்க்கையாக முதன்மையாக விளங்கி வாழ்க்கைத் தரம் உயரவும், இறைவனின் திருக்குலம் என்று சான்று பகரும் வகையில் இவர்களின் செயல்பாடுகள் அமைந்து இறையருள் இவர்கள் சந்ததியை தொடரவும் இத்தவக்காலத்தில் பாவம் களைந்து பரிசுத்தமான வாழ்வு அமையவும் எங்களின் முயற்சிகள், தேவைகள், விண்ணப்பங்கள் வெற்றி பெறவும் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**இளையோருக்காக மன்றாடுவோம்.** எமது இளைய தலைமுறையினர் தங்களது ஆற்றலையும் திறமையையும் உகந்த முறையில் உரிய நேரத்தில் பயன்படுத்தி, வாழ்வில் உயரவும் கல்வியிலும், கலையிலும், திறமைகளிலும் இறையருளால் ஞானத்தோடு சிறந்து செயல்படவும் இவர்களின் தேவைகளையும் எண்ணங்களையும் இறைவன் நிறைவேற்றவும், வாழ்வில் முன்னேற்றமும் எதிர்காலமும் ஏற்ற வேலையும் துணையையும் தரவேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**20.03.2017 மரியாவின் கணவர் தூய யோசேப்பு பெருவிழா** **திருப்பலி**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

**முன்னுரை**

கிறிஸ்துவில் பிரியமுள்ள இறைமக்களே நமது தாயாம் திருச்சபை இன்று தூய யோசேப்பு மரியாவின் கணவர் பெருவிழாவைக் கொண்டாடுகிறது. இந்த விழா கி.பி.10ஆம் நூற்றாண்டிலிருந்து மேல்திசை நாடுகளின் பல திருநாள் பட்டியல்களின் படி, தூய யோசேப்பு மார்ச் 19ஆம் நாள் நினைவு கூறப்படுகிறார். இத்திருவிழா அதே நாளில் கொண்டாடப்பட வேண்டுமென்று 1479ஆம் ஆண்டு உரோமையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின் 1621 இவ்விழா எப்பொழுதும் தவக்காலத்தில் வர நேரிடுவதால் தவக்காலத்திற்கு புறம்பே மற்றொரு நாளுக்கு மாற்றி வைக்க, ஆயர் குழுக்களுக்கு அதிகாரம் உண்டு அந்த அதிகாரத்தின்படி, இந்த ஆண்டு ஞாயிறு வருவதால் திங்கட்கிழமை மாற்றி வைத்துள்ளது.

மீட்பு திட்டத்தில் மரியாவின் கணவர் இறைவார்த்தைக்கு அஞ்சி கீழ்ப்படிந்து நல்ல மாமனிதராக வாழ்ந்தார். அதனால் அவரை நேர்மையாளர், நீதிமான், அமைதியானவர், கடின உழைப்பாளர், பொறுப்பானவர், நல்ல குடும்பத் தலைவர், தவறுகள் செய்தவரை யார் முன்னிலையிலும், சுட்டிக்காட்டி அவர்களை இழிவுப்படுத்த விரும்பாதவர் என்று அடைமொழிகள் கொடுத்துக் கொண்டே போகிறோம். இந்த பெருவிழா நாளில் நாமும் நல்ல பொறுப்புள்ள பெற்றோர்களாக வாழவும், இறைவார்த்தைக்கு அஞ்சி கீழ்ப்படிதல் உள்ள பிள்ளைகளாக வாழவும் நீதியையும், நேர்மையையும் அணிகலன்களாகக் கொண்டு வாழ்வோம் என வேண்டி பக்தியுடன் இன்றைய திருப்பலியில் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

இறைத்திட்டத்தைத் தேர்ந்து தெளிந்து அதன்படி வாழ்வதே நிறைவைத்தரும் என்று ஆழமாக உணர்த்திய இறைவா, திருச்சபையை ஆளும் திருத்தந்தை பிரான்சிஸ் அருள் பணியாளர்கள் தங்களின் சொந்த விருப்பங்களைத் தேடாமல் எளிமைப் பண்புள்ளவர்களாக வாழவேண்டுமென்று திருத்தந்தை கேட்டுக் கொண்டதற்கேற்ப வாழ்வதற்குத் தேவையான அருளை தூய யோசேப்பு வழியாக தந்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

கடின உழைப்பான தச்சுத் தொழிலை ஏற்று விருப்பத்தோடு செய்த இறைவா, இன்று தண்ணீர் பஞ்சம் காரணமாக விவசாய பெருமக்கள் தற்கொலைக்கு ஆளாகி குடும்பங்களைத் தவிக்க விட்டுப் போய்விடுகிறார்கள். அவர்கள் கடவுள் மீதும், அவர் வார்த்தையின் மீதும் நம்பிக்கைக் கொண்டு வாழத் தேவையான அருள் வரங்களை தொழிலாளர் தோழர்களுக்கு துணையான தூய யோசேப்பு வழியாக தந்துதவ வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

வன்முறையற்ற அகிம்சை வழியைக் கற்பித்த இறைவா, நாட்டிலும் குடும்பத்திலும் வன்முறைகளால் ஒற்றுமை சிதைக்கப்பட்டு, பழிவாங்கும் தன்மை அதிகரித்துள்ளதால், நாடும் வீடும் குழப்பமும், கொந்தளிப்பும் கொண்டு திசை தெரியாது திகைத்துக் கொண்டிருக்கிறது. நாசரேத்தூர் குடும்பம் போல் தூய யோசேப்பு வழிநடத்திய அடிச்சுவட்டில் நாமும் வாழ்ந்து தெளிவான சமுதாயத்தைப் படைக்கத் தேவையான வரமருள உம்மை மன்றாடுகின்றோம்.

**24.03.2017 தவக்காலம் 4ம் வெள்ளி**

திருமதி. ராணி வில்சன்

**விசுவாசிகளின் மன்றாட்டு**

அன்பே இறைவா, இறையாட்சி அமைய அன்றாடம் உழைக்கும் எம் திருஅவை அன்பு பணியாளர்கள் அனைவரையும் பாதுகாத்து வழிநடத்திட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

ஆயனே இறைவா, நாங்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் வாய்ப்பு கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும், இறையாட்சி அமைந்திட இறை இயேசுவின் நற்செய்தியை அறிவிக்க கடமைப்பட்டுள்ளோம். இத்தவக்கால முயற்சிகளால் நாங்கள் இதனை அமைத்திட எங்களுக்கு வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

இரக்கமே உருவான இறைவா, கிராமங்கள் எங்கள் தமிழகத்தின் முதுகெலும்பு. விவசாயம் கருகி பொய்த்துப் போகிறது. விவசாயிகளின் குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்திற்கு அரசு உதவிட வேண்டுமென்றும், நிலங்கள் நீர் வளம் பெறவும், தேவையான மழை பெறவும் உமது கருணையை அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.

விடுதலை நாயகனே, முழு மனித விடுதலை அனைவரும் பெற்று உமது இறையாட்சியின் அருகே நாங்கள் வாழ அனைத்து வரங்களையும் பொழிந்து ஆசீர்வதிக்க உம்மை மன்றாடுகிறோம்.

**25.03.2017 கிறிஸ்து பிறப்பு முன்னறிவிப்பு பெருவிழா** **திருப்பலி**

திரு. ஜான் அலெக்சாண்டர்

"வார்த்தை மரியாவின் மகனானதும், மரியா கடவுளின் தாயானதும்"

**முன்னுரை**

அன்புக்குரியவர்களே, காலம் கனிந்தபோது கடவுளின் திட்டம் வானதூதர் வழியாக அன்னை மரியாவுக்கு மங்கள வார்த்தை வடிவில் வெளிப்படுத்தப்பட்டதை நினைவுகூறும் விழாவை நாம் இன்று கொண்டாடுகின்றோம். இவ்விழா கடவுள் நம்முள் ஒருவரானார் என்பதை உணர்த்துகிறது. 431ல் நடைபெற்ற எபேசு சங்கத்திற்குப் பிறகு இந்த விழா திருச்சபையில் கொண்டாடப்பட்டு வருகிறது. குடும்பத்தில் (சாரா ஆபிரகாம்) குழந்தை பிறப்பு அறிவிப்பு அறிவிக்கப்படும்போது அதற்கென்று ஒரு அமைப்பு முறையை கொண்டிருப்பதையும் அதில் சிறப்பாக ஐந்து படிமுறைகள் இருப்பதையும் நாம் பார்க்கலாம். முதலாவது இறைத்தூதின் தோற்றம் (லூக் 1:26), இரண்டாவது தோற்றத்தின் விளைவால் அச்சம் (லூக் 1:29), மூன்றாவது செய்தி அறிவிக்கப்படல் அதாவது குழந்தையின் முழு விபரங்கள் மற்றும் வருங்கால சாதனைகள் பற்றியதாக இருக்கும் (லூக் 1:28, 30-33, 35), நான்காவது ஒருவித கலக்கம், எதிர்வினா அல்லது அடையாளம் ஒன்று வேண்டல் (லூக் 1:34) இருக்கும். இறுதியாக ஐந்தாவது அமைப்பு, செய்தி தருபவருக்குத் தெளிவோ, அடையாளமோ அளிக்கப்படல் (லூக் 1:36-37). பிறப்பு அறிவிப்பில் சிலவற்றில் இந்த அத்தனை அமைப்புகளும் இடம் பெறும் அல்லது இடம்பெறாமலும் போகலாம். ஆனால் அனைத்து அமைப்புகளும் கிறிஸ்து பிறப்பு அறிவிப்பிலே இருந்ததை நாம் பார்க்கின்றோம். எனவே அன்பிற்குரியவர்களே, மீட்பரின் தாயாகத் தன்னை இறைவன் தேர்ந்தெடுத்திருக்கிறார் என்பதை அறிந்ததும் முழுமன சம்மதத்துடன் அன்னை மரியா தம் ஒப்புதலைத் தருகிறார். அக்கணமே இறைவார்த்தை அன்னை மரியாவின் கருவில் உடல் எடுத்ததை நாம் அறிவோம். அவ்வாரே தம்மைத் தேர்ந்துகொள்ளும் இறைவனை நம்பி இறைவார்த்தைக்கு கீழ்ப்படிந்து வாழும் எல்லோருள்ளும் இறைமகன் பிறக்கின்றார் என்பதில் உறுதியுடன் வாழ தொடர்ந்து இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

தூய்மையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் துறவிகளுக்காக மன்றாடுகிறோம். உள்ளமும் செயலும் நன்மையைக் கனியாக ஈந்தால்தான் முழுமையாக மனிதம் மலர்கிறது என்பதை அவர்களின் வாழ்வின் மூலம் நாங்கள் அறிந்து மனிதம் மலரும் இடத்தில் புனிதம் மணம்வீசும் என்பதற்கிணங்க எங்கள் வாழ்வை அமைத்துக்கொள்ள வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

அனைத்திலும் சிறந்தது அன்பே என்பதை அறியும் நாங்கள் உண்மையான அன்பின் மக்களாக வாழவும் உம்மை தாழ்ச்சியோடு அணுகி வர வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்

அன்னை மரியா மனிதகுலம் மீட்பு அடையும்போது எந்நிலையை அடையும் என காட்டும் விதத்தில் கடவுளின் அரசில் ஏற்றுக்கொள்ளப்பட்டு மாட்சிமை அடைந்ததுபோல நாங்களும் கடவுளின் திருவுளத்தை எப்போதும் நிறைவேற்றிட அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்

இறைவா அமைதி தேடி ஏங்குகின்ற மக்களின் வாழ்வில் இன்னும் கோலோச்சுகின்ற அடிமைத்தனங்கள் மறைந்து சமத்துவமும், அன்பும், சுதந்திர அனுபவமும் விடிந்திட அதற்காக நாங்கள் உழைத்திட அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**26.3.2017 தவக்கால 4ம் ஞாயிறு திருப்பலி**

திருமதி. ராணிசம்பந்தன்

**முன்னுரை**

இறையன்பில் வாழும் இனிய நெஞ்சங்களே, "தூங்குகிறவனே விழித்தெழு, இறந்தவனே உயிர் பெற்றெழு, கிறிஸ்து உன்மீது ஒளிர்ந்தெழுவார்" என்று நம் விவிலியம் கூறுவதை உண்மையாக்க செயல்படுவோம் என்ற அடிப்படையில் இன்றைய வாசகங்கள் ஒலிக்கின்றன. ஆண்டவர் கூறுவது என்ன "அவன் தோற்றத்தையும், உயரத்தையும் பார்க்காதே. நான் மனிதர் பார்ப்பது போல் பார்க்கவில்லை. மனிதர் முகத்தை பார்க்கிறார், ஆனால் நானோ அகத்தை பார்க்கிறேன்" என்று உறுதியாக கூறுகிறார். நற்செய்தியிலும் கூட பார்வையற்ற ஒருவருக்கு பார்வை கொடுத்து பின்னர் அவரிடம் "மானிட மகனிடம் நம்பிக்கை கொள்கிறீரா?" என்று கேட்கிறார். இதன் மூலம் நம்பிக்கையினின்று நம்மை ஒளிக்கு அழைத்து செல்கிறார் இயேசு. விடுதலை தரும் ஒளியாக வந்த இயேசுவையும் அவர் வெளிப்படுத்தும் ஒளியையும் நாம் ஏற்கவில்லையெனில் நாம் இருளில் தான் நிலைக்க நேரிடும் என்பதே இன்றைய கூற்று. இயேசுவின் அருகில் பரிசேயர்கள் வாழ்ந்தும், அவரை கண்டு கொள்ளாமலும் அவரது ஒளியின் மகிமையை அறியாமலும் பாவப்பட்ட மக்களானார்கள். இன்றோ தாழ்ச்சியான உள்ளத்துடன் நம் இயேசுவை உலகின் ஒளியாக வரவேற்போம். அவரில் நம்பிக்கை வைத்து அவரது ஒளியில் பார்வைபெற்று வாழ்வின் சூழல்களை தெளிவாக உணர்ந்து பயமின்றி பயணிப்போம். இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

உலகின் ஒளியே இறைவா, உமது வழியை பின்பற்றும் திருத்தந்தை, ஆயர்கள், கர்தினால்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் ஆகிய நாங்களனைவரும் இயேசுவின் ஒளி பெற்றவர்களாக உற்சாகத்துடனும், உறுதியுடனும் நமது திருச்சபை பொலிவுடன் திகழ உண்மையுடன் உழைப்போம் என்ற நோக்கம் நிறைவேற உம்மை மன்றாடுகிறோம்.

நல்லாயனே இறைவா, உமது மந்தை உலக போக்கின்படி தவறான பாதையில் சென்றுவிடாமல் பாதுகாக்க நல்லாயனான உம்மால் மட்டுமே முடியும் என்ற நமது நம்பிக்கைக்கு ஏற்ப, செல்வத்தில் திளைப்போர் வறுமையில் வாடுவோர் சூழ்நிலை புயலால் இங்கும் அங்கும் அலைகழிக்கப்படுவோர் என்ற பலதரப்பட்ட மக்களை மந்தையை மீட்டு வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

பாதுகாக்கும் இறைவா, கல்வி கற்கும் இளம் சிறார்கள் முதல் வாலிப பிள்ளைகள் வரை இக்கால சூழ்நிலையின் தாக்கத்தால் கல்வியின் மேன்மை உணராமல், காலத்தின் அருமை புரியாமல், விளையாட்டு தனங்களால் தேர்வில் வெற்றி பெறமுடியாதவர்களாக மாறிவிடாமல் உமது உள்ளங்கையில் அவர்களை நிலைநிறுத்த வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

**31.3.17 தவக்காலம் 5ம் வெள்ளி**

திருமதி. ராணி வில்சன்

**விசுவாசிகளின் மன்றாட்டு**

தாயும் தந்தையுமான இறைவா, திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் இறை பணிபுரியும் அனைவரையும் நீர் ஆசிர்வதிக்க வேண்டும். இவர்கள் அனைவரும் தான் யார்? எதற்காக அனுப்பப்பட்டுள்ளோம் என்பதை உணர்ந்து இறையாட்சிக்காக உழைக்கவும், அதன் பலனை நாங்கள் அடையவும் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

தூயவரான இறைவா, குடும்பம், சமூகம், அனைத்தும் நீதிக்கு எதிரான எந்த பிரிவினைக்கும் இடம் தராமல் வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

ஏழைகளின் தோழனே இறைவா, வருகின்ற உள்ளாட்சி தேர்தலில் உண்மையாக மக்களுக்கு உழைப்பவர்களை விவசாயி நலன் கருதுபவர்களை மனித நேயமிக்கவர்களை நீர்தாமே தேர்ந்தெடுத்து தரவேண்டும். அவர்களால் தமிழகம் தன்னாட்சி நிறைவு பெற்று தலைநிமிர அருள்புரிய வேண்டுமென்று உம்மை கெஞ்சி மன்றாடுகிறோம்.

இனிய தேவனே, எங்களுக்காக போரிடுபவர் நீரே. ஆகவே கிறிஸ்தவர்களுக்கு எதிராக வரும் அத்தனை இடைஞ்சல்கள், சவால்கள், போராட்டங்கள் அனைத்தினையும் முறியடித்து வெற்றியை கொடுக்க வேண்டுமென உம்மை மன்றாடுகிறோம்.

## உறவுப் பாதை

### முன்னுரை

அநீதிகளை அறுத்தெரிய, தீமைகளைச் சுட்டெரிக்க, பாவ இயல்பைக் களைந்தெரிய, அறைகூவல் விடுக்கும் ஒரு பயணம். ஒரு சரித்திரத்தை உருவாக்கி, பலரின் சரித்திரத்தை மாற்றிட்ட புதிய பயணம். இயேசுவின் சிலுவைப் பயணம் நமக்கு என்னத் தருகிறது? இயேசுவின் சிலுவைப் பயணம் நமக்கு எதை உணர்த்துகிறது? இயேசுவின் சிலுவைப் பயணத்தில் நாம் யார்? பங்கேற்பாளரா? பார்த்து இரசிப்பவரா? பரிகசிப்பவரா? பரிதாபப்படுபவரா? அல்லது அந்த பயணத்தில் நம்மையும் இணைத்துப் பார்ப்பவர?

### பயணநிலை 1: இயேசு தீர்ப்பிடப்படுகிறார்

**ஒருவர்:** திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.

**எல்:** அதேனென்றால் உமது பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

நாம் பிறர் துன்பத்தைக் கண்டு அதைத் துடைக்க மறுக்கின்ற பொழுதும், நம் கண்முன்னே பிறர் நீதியின் பொட்டு துன்பப்படும் பொழுதும், அதைக் கண்டும் காணாமல் நமக்கென்ன நாம் உண்டு, என் வேலையுண்டு நாம் இயேசுவை மரணத்திற்கு கையளிப்பதற்கு சமம். அநீதிகள் மட்டுமே வளர்க்கப்படுவதால் நீதிகள் நசுக்கப்படுகின்றன. இந்த சமுதாயம் அநியாயமானது அன்று. நாம்தான் அநியாயமானவர்கள். நம்மால்தான் இந்த சமுதாயதம் அநியாயமாக்கப்படுகிறது. நான், எனது என்னுடையது என நம்மைப்பற்றி மட்டுமே சிந்திக்கும்போதும், எது நடந்தால் எனக்கென்ன என்ற குறுகிய வட்டத்தில் வாழும்போதும், பிறர் துன்பத்தைத் துடைக்க மறுக்கும்போதும் பிறருக்கு உதவ நாம் மறுக்கும்போதும் இயேசுவை மரணத்திற்குத் தீர்ப்பிடுகின்றோம்.

**ஒருவர்:** எங்கள்மேல் இரக்கமாயிரும் சுவாமி இரக்கமாயிரும்

**எல்:** மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் இறைவனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவன. ஆமென்.

### பயணநிலை 2: இயேசு சிலுவையை ஏற்றுக்கொள்கிறார்

**ஒருவர்:** திவ்விய இயேசுவே......

**எல்:** அதேனென்றால்.......

சுமைகளைச் சுமந்தவர்களே வரலாற்றை படைத்திருக்கிறார்கள். சிலுவை அனுபவம் ஒரு சுமைதான். ஆனால் மீட்பின் சுமைகளும், சுவைகளும் நாணயத்தின் இரு பக்கங்கள், சுவைகளை விரும்பும் நாம் சுமைகளை விரும்பும் நாம் சுமைகளை மறுப்பதேன்? நமது சுமைகளை நாமே சுமக்க பழகிக் கொள்வோம். முடிந்தால் பிறரின் சுமைகளையும் ஏற்றுக்கொண்டு பயணிப்போம். அந்தப் பரமனின் பாதச் சுவட்டினில் பயணித்தால், நமது சுமைகளும் சுகங்களாகும்.

**ஒருவர்:** எங்கள்மேல் இரக்கமாயிரும் சுவாமி இரக்கமாயிரும்

**எல்:** மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் .....

**பயணநிலை 3: இயேசு முதல் முறை தரையில் விழுகிறார்**

**ஒருவர்:** திவ்விய இயேசுவே........

**எல்:** அதேனென்றால்........

சோதனைகள் என்றும் சொந்தங்களாவதில்லை, துன்பங்கள் என்றும் தொடர்வதில்லை. வாழ்வினில் வரும் சோதனைகளை சந்தித்து அவற்றை சவால்களாய் ஏற்றுக்கொள்வோம். சவால்களைச் சந்திக்கின்றனவன் தான் பிற்காலத்தில் பார் போற்றும் சாதனையாளராகிறான். சோம்பலைக் கைவிடு, உன் சாம்பல்கூட சாதனை படைக்கும். சோதனையில் வீழ்ந்து கிடக்கும் நம்முன் வைக்கப்படுகின்ற சவால்களைச் சந்திக்கப் புறப்படுவோம்.

**ஒருவர்:** எங்கள்மேல் இரக்கமாயிரும் சுவாமி இரக்கமாயிரும்

**எல்:** மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்........

**பயணநிலை 4: தாய் மகனைச் சந்திக்கிறார்**

**ஒருவர்:** திவ்விய இயேசுவே........

**எல்:** அதேனென்றால்........

உறவின் அடிப்படையாய் அமைவது அன்பேயாகும். அந்த அன்பினை ஒருவர் மற்றவரோடு பகிரும் தருணம் இதோ. தன் மகனின் நிலையறிந்து அவர் மேற்கொள்ளும் பயணத்தை மெருகூட்டி மனதைரியத்தை தருகிறார் நம் அன்னை மரியாள். உறவுகள் சிதைந்து கிடக்கும் இந்த மானுட சமுதாயத்தில் புது உறவையும் அதற்கேற்ற வலுவையும் தரும் ஒரு சின்னமாக இந்த சந்திப்பு நிகழ்கிறது. நம் குடும்பங்களில் உறவுகள் தவறான வழியை நோக்கி பயணிக்கும்போது அதை சரிசெய்ய முற்பட்ட அன்னை மரியாள்போல் உறவை வலுவாக்க முற்பட்டு இருக்கிறோம்.

**ஒருவர்:** எங்கள்மேல் இரக்கமாயிரும் சுவாமி இரக்கமாயிரும்

**எல்:** மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்........

**பயணநிலை 5: சீமோன் இயேசுவுக்கு உதவுகிறார்**

**ஒருவர்:** திவ்விய இயேசுவே........

**எல்:** அதேனென்றால்........

நாம் எப்படி வாழ்கிறோம், வள்ளலாகவா, வாழையாகவா, கஞ்சனாகவா, பிறரிடம் எதிர்ப்பார்த்து உதவி செய்பவராகவா? எந்த ஒரு உதவியும் தன்னகத்திலிருந்து வரும்போதுதான் அந்த மனப்பான்மைக்கு ஓர் உயரிய மதிப்பு உண்டு. நாம் கர்வமாக சொல்லி செய்யும் உதவி என்றும் பிறரிடம் நமக்கு நல்ல பெயரை வாங்கி தராது. சீமோனின் உதவியானது இயேசுவுக்காக தன்னையே அளித்ததன் அடையாளமாக இருக்கிறது. இதனாலேயே சீமோன் இறைவனின் திட்டத்திற்கு ஏற்புடைய நிலையை பெறுகிறார். அவரைப்போல நாமும் பிறர் நலன் கருதி உதவி செய்ய முற்ப்படுவோம்.

**ஒருவர்:** எங்கள்மேல் இரக்கமாயிரும் சுவாமி இரக்கமாயிரும்

**எல்:** மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்........

**பயணநிலை 6: இயேசுவின் திருமுகத்தை வெரோணிக்கா துடைக்கிறார்**

**ஒருவர்:** திவ்விய இயேசுவே........

**எல்:** அதேனென்றால்........

மங்கையராக பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமென்றான் கவிமணி. மனிதகுலம் முழுவதையும் இயக்குகின்ற சக்தி தன்னகத்தே இருந்தும், இன்றும் பெண்கள் அடிமைகளாகவே இருக்கின்றார்களே ஏன்? அவர்களை அடிமைகளாக ஆக்கியது யார்? ஆண்களா? இந்த சமுதாயமா? இரண்டும் இல்லை. வீரத்தின் அடையாளமாக திகழும் இப்பெண்ணை போன்று நம் சமுதாயத்தில் பெண்கள் உருபெற நாம் ஒவ்வொருவரும் பெண்மை போற்றும் நபர்களாய் இருந்து அவர்களின் வளர்ச்சியில் பெருமிதம் கொள்வோம்.

**ஒருவர்:** எங்கள்மேல் இரக்கமாயிரும் சுவாமி இரக்கமாயிரும்

**எல்:** மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்........

**பயணநிலை 7: இயேசு இரண்டாம் முறை விழுகிறார்**

**ஒருவர்:** திவ்விய இயேசுவே........

**எல்:** அதேனென்றால்........

அன்பால் இவ்வுலகை ஆளலாம். ஆனால் சில வேளைகளில் அன்பினை மறந்து ஆத்திரப்பட்டு, பின் அவதியுறுகிறோம். கோபத்தில் குணம் கெட்டு, பிறரை மன்னிக்கக்கூட மனமில்லாது அலைகிறோம். பிறரை மன்னிக்க மறுக்கும்போதெல்லாம், கோபத்தில் பிறரை வஞ்சிக்கும் போதெல்லாம் நாம் கீழே விடுகிறோம். நான் என்ற ஆணவம் எப்போதெல்லாம் தோன்றுகிறதோ, அப்பொழுதெல்லாம் எழ இயலாதவர்களாய் கீழே விழுந்து கிடக்கிறோம். பகைவரையும் மன்னித்த பரமன் இயேசுவின் பாதையில் பயணிக்கும் நாம் எப்படியிருக்கிறோம்?

**ஒருவர்:** எங்கள்மேல் இரக்கமாயிரும் சுவாமி இரக்கமாயிரும்

**எல்:** மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்........

**பயணநிலை 8: இயேசு பெண்களுக்கு ஆறுதல் கூறுகிறார்**

**ஒருவர்:** திவ்விய இயேசுவே........

**எல்:** அதேனென்றால்........

எனக்காக அழ வேண்டாம். உங்களுக்காகவும், உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள் என்கிறார் இயேசு. ஆம், குழந்தைகளைச் சரியான பாதையில் வழி நடத்தத் தவறிய குற்றத்திற்காய் அழுவோம். பிள்ளைகள் தவறு செய்யும்போது கண்டித்துத் திருத்தாமல், அந்த தவற்றை நியாயப்படுத்திய குற்றத்திற்காக மனம் வருந்தி அழுவோம். பெற்றோர்களுக்குக் கீழ்ப்படியாதமல் சுற்றித் திரிந்து வெட்டியாக பொழுதைப் போக்கிய தவற்றிற்காக, கிறிஸ்தவனாக வாழ்ந்தும் பில்லி, சூனியம், மாயம், மாந்திரீகம் இவற்றின்மேல் நம்பிக்கை வைத்திருக்கும் குற்றத்திற்காக மனம் வருந்தி அழுவோம்.

**ஒருவர்:** எங்கள்மேல் இரக்கமாயிரும் சுவாமி இரக்கமாயிரும்

**எல்:** மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்........

**பயணநிலை 9: இயேசு மூன்றாம் முறை விழுகிறார்**

**ஒருவர்:** திவ்விய இயேசுவே........

**எல்:** அதேனென்றால்........

நாம் குறுக்கு பாதையில் பயணம் செய்கின்ற ஒவ்வொரு நிமிடமும் கீழே விழுந்து கிடக்கிறோம். தன்னம்பிக்கை அற்றவனாக, அற்றவளாக, சொந்த உழைப்பை மறந்து எப்படியாவது சம்பாதிக்க வேண்டும். அதற்காக பிறரை ஏமாற்றினாலும் தவறில்லை என்று பிறரை ஏமாற்றி பணம் சேர்க்கிறோம்.

ஆசையும் ஏக்கமும் செல்வத்தைச் சேர்க்க, உழைப்பே செல்வத்தைச் சேர்க்கும். எப்படியும் வாழலாம் என்பது வாழ்க்கையல்ல, இப்படித்தான் வாழ வேண்டும் என்பதுதான் வாழ்க்கை. பணத்தாசையால் குறுக்கு வழியில் வீழ்ந்து கிடக்கும் நாம் இறைவனில் நம்பிக்கை வைப்போம். முயன்று உழைப்போம், புதிய பாதைகள் நமக்காய் உருவாகும்.

**ஒருவர்:** எங்கள்மேல் இரக்கமாயிரும் சுவாமி இரக்கமாயிரும்

**எல்:** மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்........

**பயணநிலை 10 இயேசுவின் ஆடையை உரிகிறார்கள்**

**ஒருவர்:** திவ்விய இயேசுவே........

**எல்:** அதேனென்றால்........

விண்ணக அரசனின் ஆடைகள் தசைகளோடு உரியப்படும்போது, பொறுமையின் உருவமாய் வீற்றிருக்கும் இயேசுவை உற்று நோக்குவோம். அவரில்தான் எத்தனை தாழ்ச்சி? நான்தான் பெரியவன் என்று நமக்குக் கீழே உள்ளவர்களை அடிமைப்படுத்துகிறோமா? உங்களுள் தலைவனாய் இருக்க விரும்புகிறவன், பணியாளனாய் இருக்கட்டும் என்பதை மறந்து போனாமா? தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்ப்படுவான் தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்பதை மறந்துபோனோமா? பணமும் பொருளும் புகழையும் அந்தஸ்தையும் தரலாம். ஆனால் நல்ல மனிதனாக நம்மை உருவாக்க நம்மை நாமே தாழ்த்திக்கொள்வோம், எளியவனாய் வலம் வருவோம்.

**ஒருவர்:** எங்கள்மேல் இரக்கமாயிரும் சுவாமி இரக்கமாயிரும்

**எல்:** மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்........

**பயணநிலை 11: இயேசு சிலுவையில் அறையப்படுகிறார்**

**ஒருவர்:** திவ்விய இயேசுவே........

**எல்:** அதேனென்றால்........

இவ்வுலகில் எதுவும் நிரந்தரம் இல்லை ஆனால் மனித மனங்களோ உலக நாட்டங்களில் முழு ஈடுபாட்டுடன் வாழ்கிறனர். உங்கள் ஆன்மா வலுவுள்ளதுதான் ஆனால் ஊனுடல்தான் வலுவற்றது என்கிறார் இயேசு. அலையில்லா கடலும், ஆசையில்லா மனமும் அரிது. ஆசையைஅ டக்கி ஆள்வதுதான் புத்திச்சாலித்தனம். ஆசையை அடக்கத் தெரியாமல் மிருகமாய் மாறி தவறு செய்யும்போதெல்லாம் இயேசுவை சிலுவையில் அறைகிறோம். நமது பேராசைக்கொண்ட எண்ணங்கள் பிறரை இழிவாக பழித்துக் கூறுதல் இவற்றை விட்டுவிட்டு, இறைவனுக்கு ஏற்புடையவராக வாழ்வோம்.

**ஒருவர்:** எங்கள்மேல் இரக்கமாயிரும் சுவாமி இரக்கமாயிரும்

**எல்:** மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்........

**பயணநிலை 12: இயேசு இரண்டாம் முறை விழுகிறார்**

**ஒருவர்:** திவ்விய இயேசுவே........

**எல்:** அதேனென்றால்........

ஒருவன் இறந்தால்தான் அவனைப்பற்றிய மதிப்பீடுகள் தெரியும் அவன் நல்லவனா? கெட்டவனா? என்று. நாம் இறந்த பிறகு நம்மைப்பற்றி பிறர் எப்படி கூற வேண்டுமென வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் இறந்த பின்னும் மக்களின் மனதில் நிலைக்க வாழ்கிறோமா? அல்லது பிறர் தூற்றும் வண்ணம் வாழ்கிறோமா? பிறருக்காக வாழ்பவன் இறந்தும் வாழ்கிறான். மனுக்குல மீட்புக்காக தன்னையே அர்ப்பணித்தார் இயேசு. ஆனால் நாம் எப்படி வாழ்கிறோம்? பிறரை வாழ வைக்கிறோமா? பிறரை அழிக்க நினைக்கிறோமா?

**ஒருவர்:** எங்கள்மேல் இரக்கமாயிரும் சுவாமி இரக்கமாயிரும்

**எல்:** மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்........

**பயணநிலை 13: அன்னை மடியில் இயேசு**

**ஒருவர்:** திவ்விய இயேசுவே........

**எல்:** அதேனென்றால்........

கருவறையில் துவங்கிய உறவு கல்லறையை நோக்கி செல்லும் பயணத்தில் தன் தாயின் மடியில் இயேசுவுக்கு மீண்டும் ஒரு அரிதான வாய்ப்பு. தன் பிள்ளையை இறைவனின் விருப்பப்படி நன்முறையில் வளர்த்து ஊர் போற்றும் தாயாய் இங்கு உருவெடுக்கிறார். நம் பிள்ளைகளின் மீது வைத்த பாசம் எவ்வாறு அவர்களின் எதிர்காலப் பயணத்திற்கு வழிவகுக்கிறது என்று சிந்திப்போம். இல்லையேல் இனியாவது அவர்களின்மீதுள்ள பாசம் அவர்களை செம்மைப்படுத்துவதாக இருக்க வேண்டுவோம்.

**ஒருவர்:** எங்கள்மேல் இரக்கமாயிரும் சுவாமி இரக்கமாயிரும்

**எல்:** மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்........

**பயணநிலை 14: இயேசு அடக்கம் செய்யப்படுகிறார்**

**ஒருவர்:** திவ்விய இயேசுவே........

**எல்:** அதேனென்றால்........

ஏதோ பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்ந்தோம் என்று ஏனோதானோவென்று வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நமக்கென்று எந்த ஒரு குறிக்கோளும் இல்லாமல் வாழ்கிறோம். மனம்போன போக்கிலே போய் கொண்டிருக்கிறோம். உயர்வான இலட்சியம் நம் கண்முன் இல்லை. நமக்குள்ளே தன்னம்பிக்கைக் கொண்டிருப்போம். நமக்கென்று இலட்சியப் பாதையொன்றை உருவாக்குவோம். புதிய இலை துளிர்க்க, சருகுகள் உதிர்ந்து விழத்தானே நமது பழைய வாழ்வினை உதிர்த்துவிட்டு, புதிய வாழ்வினுக்காய் துளிர்விடுவோம். புறப்படுவோம் புதிய வாழ்வின் வேர்களைத் தேடி விரைவோம்.

## 2. மானிடக் கண்ணோட்டப் பாதை

**முன்னுரை**

இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகியவை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நடந்த வெறும் வராற்று நிகழ்வுகள் மட்டுமன்று, அவை இன்று நமக்கு உணர்த்தும் பாடங்களோ ஆயிரமாயிரம். அப்பாடங்களை நாம் பார்வையாளர்களாய் இருந்து பார்ப்பதை தவிர்த்து நம் வாழ்வில் பின்பற்றி இறைவன் நமக்கு விடுத்த அழைப்பை உணர்ந்து அவர் பணி செய்து வாழவேண்டிய ஒரு புதிய சிந்தனையோடு இப்பரமனின் பாதச்சுவட்டினை பின்பற்றி தொடர்வோம்.

**பாதச் சுவடு 1: இயேசு தீர்ப்பிடப்படுகிறார்**

**ஒருவர்:** திவ்விய இயேசுவே........

**எல்:** அதேனென்றால்........

**செபம்:** அன்பு இறைவா, நீதி எது? அநீதி எது? வாய்மை எது? பொய்மை எது? நன்மை எது? தீமை எது? என தெளிவாகத் தெரியும் நேரங்களிலும், என் சுயநலத்திற்காக நீதியையும், வாய்மையையும், நன்மையையும் குழித்தோண்டி புதைத்துவிட்டு, அநீதிக்கும், பொய்மைக்கும், தீமைக்கும் ஒப்புதல் அளிக்கும் மனநிலையிலிருந்து விடுபட எனக்கு வரமருளும். ஆமென்.

**ஒருவர்:** எங்கள்மேல் இரக்கமாயிரும் சுவாமி இரக்கமாயிரும்

**எல்:** மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்........

**பாதச் சுவடு 2: இயேசு சிலுவையை ஏற்றுக்கொள்கிறார்**

**ஒருவர்:** திவ்விய இயேசுவே........

**எல்:** அதேனென்றால்........

**செபம்:** அன்பு இறைவா, எங்களுடைய பதவியை தக்க வைத்துக்கொள்வதற்காக நாங்கள் அநீதிகளைக் கண்டும் காணாததுபோல் இருந்து விடுகிறோம். இந்த மனநிலையிலிருந்து நாங்கள் விடுபட்டு, நீதிக்காகக் குரல் கொடுக்கவும், அதன் பொருட்டு துன்பங்களை ஏற்க நேரினும் மகிழ்வுடன் ஏற்கும் மனப்பக்குவத்தை எங்களுக்குத் தந்தருளும். ஆமென்.

**ஒருவர்:** எங்கள்மேல் இரக்கமாயிரும் சுவாமி இரக்கமாயிரும்

**எல்:** மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்........

**பாதச் சுவடு 3: இயேசு முதல் முறை தரையில் விழுகிறார்**

**ஒருவர்:** திவ்விய இயேசுவே........

**எல்:** அதேனென்றால்........

**செபம்:** அன்பு இறைவா, பல்வேறு சூழல்களில் பலரிடமிருந்து நாங்கள் பல்வேறு உதவிகளைப் பெறுகிறோம். எப்போதும் மற்றவர்களிடமிருந்து உதவிகளைப் பெறவே எண்ணுகின்ற நாங்கள், எங்களுடைய உதவி மற்றவர்களுக்குத் தேவைப்படும்போது எத்தகைய இடையூறுகளுக்கு இடையிலும் துணிந்து உதவி செய்ய எங்களுக்கு வரமருளும். ஆமென்.

**ஒருவர்:** எங்கள்மேல் இரக்கமாயிரும் சுவாமி இரக்கமாயிரும்

**எல்:** மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்........

**பாதச் சுவடு 4: தாய் மகனைச் சந்திக்கிறார்**

**ஒருவர்:** திவ்விய இயேசுவே........

**எல்:** அதேனென்றால்........

**செபம்:** அன்பு இறைவா, எங்கள் பெற்றோர், பிள்ளைகள் அல்லது உடன்பிறந்தோர் பிறர்நல சேவைகளில் ஈடுபட்டு சில நேரங்களில் தங்கள் உயிரையும் இழக்க நேரிடும்போது, அதை ஏற்க எங்கள் மனம் மறுக்கிறது. உம் தந்தையின் பணியினை நிறைவேற்ற உம் அன்னை உமக்கு உதவியதுபோல், நாங்களும் பிறர்நலப் பணிகளில் ஈடுபடுவோருக்குப் பக்கபலமாக இருக்க உதவிசெய்யும். ஆமென்.

**ஒருவர்:** எங்கள்மேல் இரக்கமாயிரும் சுவாமி இரக்கமாயிரும்

**எல்:** மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்........

**பாதச் சுவடு 5: சீமோன் இயேசுவுக்கு உதவுகிறார்**

**ஒருவர்:** திவ்விய இயேசுவே........

**எல்:** அதேனென்றால்........

**செபம்:** அன்பு இறைவா, அடிப்படையிலேயே மனிதரைப் பிறர் நலத்தில் அக்கறையுள்ளவராகப் படைத்தீர். தன்னலம் என்ற பேய் சில வேளைகளில் தலைவிரித்தாடினாலும் பிறர் நலமே மனிதரின் அடிப்படை இயல்பாக இருப்பதைக் காண முடிகிறது. இந்தப் பிறர்நல இயல்பில் நாங்கள் தொடர்ந்து வளர, எங்களுக்கு உமது அருளைப் பொழிந்தருளும். ஆமென்.

**ஒருவர்:** எங்கள்மேல் இரக்கமாயிரும் சுவாமி இரக்கமாயிரும்

**எல்:** மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்........

**பாதச் சுவடு 6: இயேசுவின் திடைக்கிறார்**

**ஒருவர்:** திவ்விய இயேசுவே........

**எல்:** அதேனென்றால்........

**செபம்:** அன்பு இறைவா, மற்றவர்களின் தேவைகளைக் குறிப்பால் உணர்ந்து, அவர்களுக்கு உதவி செய்யும்போது உண்மையிலேயே மற்றவர்களுக்கு மகிழ்வை அளிக்க முடிகிறது என்பதை உணர்ந்து உதவிட வேண்டும் என மற்றவர்கள் கேட்பதற்கு முன்பே அவர்களுக்கு உதவும் தாராள மனதை எங்களுக்குத் தந்தருளும். ஆமென்.

**ஒருவர்:** எங்கள்மேல் இரக்கமாயிரும் சுவாமி இரக்கமாயிரும்

**எல்:** மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்........

**பாதச் சுவடு 7: இயேசு இரண்டாம் முறை விழுகிறார்**

**ஒருவர்:** திவ்விய இயேசுவே........

**எல்:** அதேனென்றால்........

**செபம்:** அன்பு இறைவா, விழுவது வீழ்ச்சியல்ல, மாறாக விழுந்தே கிடப்பதுதான் வீழ்ச்சி. வாழ்க்கை என்ற பயணத்தில் தொடர்ந்து நடைபோட முடியாமல் பல்வேறு காரணிகள் குறுக்கிடலாம். இவற்றையெல்லாம் தடைக்கற்களாக எண்ணாமல் வெற்றிக்கான படிக்கற்களாக எண்ணி, தொடர்ந்து நடைபோட வரமருளும். ஆமென்.

**ஒருவர்:** எங்கள்மேல் இரக்கமாயிரும் சுவாமி இரக்கமாயிரும்

**எல்:** மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்........

**பாதச் சுவடு 8: இயேசு பெண்களுக்கு ஆறுதல் கூறுகிறார்**

**ஒருவர்:** திவ்விய இயேசுவே........

**எல்:** அதேனென்றால்........

**செபம்:** அன்பு இறைவா, நாங்கள் துன்பப்படும்போது மற்றவர்கள் எங்களுக்காக வருத்தப்பட வேண்டும், எங்களுடைய துன்பத்தில் அவர்களும் பங்குகொள்ள வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். எங்களின் இந்த மனநிலையை மாற்றி உம்மைப்போல் எமது துயரினைப் பெரிதுப்படுத்தாமல் மற்றவரின் வாழ்வில் அக்கறைக்கொள்ள எமக்கு வரமருளும். ஆமென்.

**ஒருவர்:** எங்கள்மேல் இரக்கமாயிரும் சுவாமி இரக்கமாயிரும்

**எல்:** மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்........

**பாதச் சுவடு 9: இயேசு மூன்றாம் முறை விழுகிறார்**

**ஒருவர்:** திவ்விய இயேசுவே........

**எல்:** அதேனென்றால்........

**செபம்:** அன்பு இறைவா, இலட்சியம், குறிக்கோள் என்பது இன்றியமையாதது. வாழ்வில் நாங்கள் எடுக்கும் நிலைப்பாடு, எத்தகைய தடைகளுக்கு இடையிலும் வாழ்வை முன்னேற்றப்பாதைக்குக் கொண்டு செல்லும் என்பதை உம் வாழ்வின் மூலம் தெளிவுப்படுத்திவிட்டீர். இதனை எங்கள் வாழ்வில் என்றும் நாங்கள் கடைப்பிடித்து வாழ வரமருளும். ஆமென்.

**ஒருவர்:** எங்கள்மேல் இரக்கமாயிரும் சுவாமி இரக்கமாயிரும்

**எல்:** மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்........

**பாதச் சுவடு 10: இயேசுவின் ஆடைய உரிகிறார்கள்**

**ஒருவர்:** திவ்விய இயேசுவே........

**எல்:** அதேனென்றால்........

**செபம்:** அன்பு இறைவா, ஒருவர் உன்னுடைய மேலாடையைக் கேட்டால் அவருக்கு உன் உள்ளாடையையும் கொடு என்று கூறிய நீர், இதோ உம் வாழ்க்கையின் மூலம் உம் வார்த்தைகளுக்குச் சான்று பகர்ந்துவிட்டீர். உம் மதிப்பீடுகளை எங்கள் வாழ்விலும் நாங்கள் கடைபிடிக்க உமது அருள் வரங்களை எம்மீது பொழிந்தருளும். ஆமென்.

**ஒருவர்:** எங்கள்மேல் இரக்கமாயிரும் சுவாமி இரக்கமாயிரும்

**எல்:** மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்........

**பாதச் சுவடு 11: இயேசு சிலுவையில் அறையப்படுகிறார்**

**ஒருவர்:** திவ்விய இயேசுவே........

**எல்:** அதேனென்றால்........

**செபம்:** அன்பு இறைவா, உம்முடைய நாவும், உதடுகளும், கரங்களும், பாதங்களும் உமக்காக அல்லாமல், மற்றவரின் ஆன்ம உடல் ஈடேற்றத்திற்காவே உழைத்தன. நாங்கள் எங்கள் உடலின் இவ்வுறுப்புக்களை பிறர்நலத்திற்காக பயன்படுத்த வேண்டிய அருளைப்பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

**ஒருவர்:** எங்கள்மேல் இரக்கமாயிரும் சுவாமி இரக்கமாயிரும்

**எல்:** மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்........

**பாதச் சுவடு 12: இயேசு உயிர்விடுகிறார்**

**ஒருவர்:** திவ்விய இயேசுவே........

**எல்:** அதேனென்றால்........

**செபம்:** தியாகத் திருவுருவே இறைவா, கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தாலொழிய அதிகப்பலன் தராது, என்று கூறிய நீர், அதிகப்பலன் தர விரும்பி உம் உயிரையே கையளித்தீர். தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை. என்று கூறிய உம் வார்த்தைகள் இன்று எம் உள்ளத்தில் ஒலிக்கின்றன. உம்மைப்பின்பற்றி நாங்களும் பிறருக்காக எம்மையே முழுமையாக அர்ப்பணிக்க வரமருளும். ஆமென்.

**ஒருவர்:** எங்கள்மேல் இரக்கமாயிரும் சுவாமி இரக்கமாயிரும்

**எல்:** மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்........

**பாதச் சுவடு 13: அன்னை மடியில் இயேசு**

**ஒருவர்:** திவ்விய இயேசுவே........

**எல்:** அதேனென்றால்........

**செபம்:** அன்பு இறைவா, மரணம் என்பது அச்சத்தைத் தருகின்ற ஒன்றாகவே இருக்கிறது. உலகில் பிறந்தவர் அனைவரும் ஒருநாள் சாகவேண்டும் என்பது எங்களுக்குத் தெளிவாக புரிந்தாலும், மரணத்தைச் சந்திக்கும்போது பயமே மேலோங்கி நிற்கிறது. உம் மரணத்தை ஏற்றுக்கொள்ள உம் அன்னைக்கு நீர் கொடுத்த மனப்பக்குவத்தை எங்களுக்கும் தந்தருளும். ஆமென்.

**ஒருவர்:** எங்கள்மேல் இரக்கமாயிரும் சுவாமி இரக்கமாயிரும்

**எல்:** மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள்........

**பாதச் சுவடு 14: இயேசு அடக்கம் செய்யப்படுகிறார்**

**ஒருவர்:** திவ்விய இயேசுவே........

**எல்:** அதேனென்றால்........

**செபம்:** அன்பு இறைவா, தீமையும், பொய்மையும் வஞ்சகமும் நிறைந்த இவ்வுலகில் நன்மையை, உண்மையை ஏற்றுக்கொள்ள தயக்கமாக உள்ளது. உண்மையென உள்ளம் உணர்ந்த பின்பும், அதைப் பிறர்முன் எடுத்துரைக்க அச்சமாக உள்ளது. உண்மைக்காகவே வாழ்ந்து, உண்மைக்காகவே உயிர் துறந்த உம் அடிச்சுவடுகளை நாங்கள் பின்பற்ற வரமருளும். ஆமென்.

## பகுதி 2 விசுவாசத்தில் வளர...

### 1. தூய யோசேப்பு - கிறிஸ்தவ உழைப்பின் முன்னோடி

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

மனிதன் ஒவ்வொருவனும் தன்னிறைவு அடைவதற்கான சாதனம்தான் உழைப்பு. இறைவன் மனிதனுக்கு அளித்த மகத்தான கொடைகளில் உழைப்புதான் முக்கியமானதாகும். அதனால்தான் உழைப்பின் பொருளை உணர்ந்தோர் "உழைப்பே தெய்வம்" என்கின்றனர். "நாம் தொழுகை நடத்துகின்ற ஆலயம் மட்டுமல்ல, நாம் உழைக்கும் இடமும் புனிதமானது" என்று காந்தியடிகள் கூறுகிறார்.

"உழைக்க மனமில்லாத எவரும் உண்ணலாகாது" (2தெச 3:10)
பழைய ஏற்பாட்டில் உழைப்பைப் பற்றி சில சீரிய கருத்துக்களைக் காணமுடிகிறது.
உழைப்பது மனித நியதி (தொநூ 2:15)
உழைப்பின் வழியாகத்தான் இறையாசீரை ஒருவர் பெறமுடியும் (தொநூ 26:12)
மனிதனின் உழைப்பு பெருமைக்குரியது, மனிதனின் சோம்பல் வெட்கத்துக்குரியது (நீதிமொழி 22:29) என்றெல்லாம் உழைப்பின் மேன்மையை அதன் அவசியத்தை வலியுறுத்திக் கூறுகிறது.

இயேசுவும் மனிதரின் உழைப்பைப் போற்றி பேசுகிறார். தாலந்து உவமையில் முயற்சி செய்பவர்கள் பாராட்டப்படுகிறார்கள் (மத் 25: 10-30) வேலை இல்லாதவருக்கு வேலை கொடுக்கும் உவமையில் மறைமுகமாக மனிதனின் உழைப்பு போற்றப்படுகிறது (மத் 20: 1-16) ஏன் இயேசுவே வளரும் பிறையாய் வளர்ந்தபோது தந்தையின் தொழிலாம் தச்சுத்தொழிலில் சிந்தையை நிறுத்தினார். தச்சன் மற்றும் தையல்காரியின் மகனுக்கு உழைப்பு விருப்பமாகத்தானே இருக்கும். தூய யோசேப்புவின் வாழ்வு ஓர் உழைப்பாளியின் வாழ்வு. அவர் அரசகுலத்தில் பிறந்திருந்தும், சாதாரண தச்சுத்தொழிலை செய்தார். இது தொழிலின் மேன்மையைக் காட்டுகிறது. கடின உழைப்பாளியான இவர், பொருட்களைக் கலைநயத்துடனும் அழகுடனும், நல்ல வேலைப்பாடுடனும் செய்வதில் திறமை மிக்கவராயிருந்தார். தொழிலில் ஆர்வமிக்க இவர் சோம்பலுக்கு இடம்தராது, குறித்த எண்ணம் இல்லாதவராய் தொழிலில் தூய்மையையும், வாய்மையையும், நேர்மையையும் கடைப்பிடித்தார். மக்களும் இவர்மீது நம்பிக்கையையும் மதிப்பையும் வைத்திருந்தனர். அவரின் வாழ்விடத்தைச் சுற்றியிருந்த ஊர்களிலும் இவரின் புகழ் பரவியிருந்தது. அதனால்தான், இயேசுவை இனம்கண்டு கொள்வதற்குக்கூட, "இவர் தச்சனின் மகன் அல்லவோ?" என்றுதான் கேள்வி எழுப்பினார். அந்தளவிற்கு மக்கள் மத்தியில் ஒரு நீங்கா இடத்தைப் பிடித்திருந்தார்.

உழைப்பு மட்டுமே தம்மை உயர்த்திவிடும் என்று எண்ணாது மக்களிடம் நல்லுறவு வைத்திருந்தார். தொழில் சார்ந்த உறவு குடும்ப உறவில் சிறந்திட பெரும் பங்களிப்பினை அளித்தது. உழைப்பும், உறவும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. உறவை வலுப்படுத்த உழைக்கும்பொழுதுதான் வாழ்வு அர்த்தம் பெறுகிறது. உடனிருப்புதான் உறவினை ஆழம்பெறச் செய்கின்றது. உடனிருப்பு என்றால், நம் அன்பும் அரவணைப்பும் யாருக்குக் கொடுக்கப்பட வேண்டுமோ அவரை ஏற்றுக்கொள்வது

புரிந்துக்கொள்வது பாதுகாப்பது சந்தேகத்திற்கு இடம் தராமலிருப்பது தம்மை முழுமையாய் ஒப்புவிப்பது. ஆம் இவையனைத்தும் உழைப்பாளியான யோசேப்பிடம் நிறைவாய் இருந்தன. அவர் மரியாளைப் புரிந்து கொண்டார், ஏற்றுக்கொண்டார், உடனிருந்தார், பாதுகாத்தார், தன்னை முழுவதுமாய் ஒப்புவித்தார், சந்தேகம் என்பதனை அறவே தவிர்த்தார், சட்டத்தைக் கடைப்பிடித்தார் சட்டத்தைக் கடந்து செயல்பட்டார், சட்டத்தால் மரியாளைக் காயப்படுத்தவில்லை, தீர்ப்பிடவுமில்லை, மரியாளின் பெண்மையை மாண்பினை மதித்தார், நேர்மையாளராய் வாழ்ந்தார்.

தூய யோசேப்பு குழந்தை இயேசுவின் வளர்ப்புத் தந்தை என்று நாம் இன்று அறிவோம். ஆனால் அன்றைய நாசரேத்தூர் வாழ் மக்களுக்கு அவ்வளவாகத் தெரியாது, குழந்தையை தந்தைக்குரிய பாசத்தோடு அன்பு செய்கிறார். குழந்தை இயேசுவை ஏரோது கொல்லப் பார்க்கிறான் என்று அவருக்கு அறிவிக்கப்பட்டபோது தொழிலையும் அதனால் வாழ்வாதாரம் பாதிக்கப்படுமே என்ற எண்ணம் சிறிதும் இல்லாதவராய், உடனே குழந்தையையும் அதன் தாயையும் வழியில் ஏற்படும் துன்பங்களையும் பொருட்படுத்தாவராய் கூட்டிக்கொண்டு எகிப்துக்கு ஓடிப்போகிறார் இந்த உண்மை ஊழியன், இறைவனின் ஆழ்ந்த விசுவாசி.

தூய யோசேப்பு இறைவனுக்கும் மனிதருக்குமாய் நேர்மையில் நிலைத்திருந்தார். இறைவனின் திருவுளத்தை தன் உதிரத்திலே தாங்கியவர் அன்னை மரியா என்றால், அவரின் திருவுளத்தைத் தம் உள்ளத்தில் தாங்கியவர் யோசேப்பு. இல்லறக் கடமைகளை குறையின்றி நிறைவேற்றியவர் பெத்லகேம் முதல் நசரேத் நகர் தங்கி, எருசலேம் தேவாலயத் திருப்பயணம் கண்டு, பாலன் இயேசுவின் குழந்தைப் பருவத்தைப் பாசத்துடன் நேசித்தவர். பாலன் இயேசு பாங்குடன் வளர்ந்திட பாதை அமைத்தவர். கடவுள் நம்முடன் இருக்கிறார் என்ற சொல்லுக்கு செயலாக்கம் தந்தவர். இறைத்திட்டம் இகமதிலே நிறைவேற தம் கையளிப்பைத் தயங்காது ஏற்றுக்கொண்டவர் நல்ல குடும்ப, திருக்குடும்பத் தலைவராக இருந்தவர் அந்த எளிமையான தச்சுத் தொழிலாளி.

தூய யோசேப்பு இயேசுவை வளர்த்த நல் ஆசான். ஞானத்தில் வளர்த்த தந்தை. நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம். ஆம், நசரேத் குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் பிள்ளை தானாக வளர்வதற்கு வழிவிட்டார்கள். தனக்குத் தெரிந்த உண்மைகளைத் தெளிவாக விளக்கிச்சொல்லும் திறமையிலும் பொறுப்புள்ள பெற்றோர்களாக மகனின் உணர்வுகளைப் புரிந்துக்கொண்டவர்களாக கேள்வி கேட்கும் உரிமையும், சிந்தனைச் சுதந்திரம் உள்ள மகனாக வளர்த்தார்கள். அவரின் தனித்தன்மையை மதித்தார்கள். ஆன்மீகத்தில் சிறப்பாய் வளர்த்தார்கள்.

அனைத்திலும் சிகரமாய் உயர்ந்த நம் தச்சனாம், உழைப்பாளியாம் யோசேப்பின் பக்தி, 9ம் நூற்றாண்டில் துவங்கியது. 15ம் நூற்றாண்டில் அதிகமாய் வளர்ந்தது. கிறிஸ்தவ உழைப்பின் முன்னோடியாக நமது புனிதர் எடுத்துக்காட்டுகிறார். உழைப்பைப் புனிதப்படுத்தவும் உழைக்கிறவர்களுக்கு ஒரு மாதிரியை அளித்து ஒரு பாதுகாவலராகக் கொடுக்கும்படியும் திருத்தந்தை 9ம் பத்திநாதர் தூய யோசேப்பைத் "திருச்சபையின் பாதுகாவலராக" டிசம்பர் 8, 1870ம் ஆண்டில் பிரகடணப்படுத்தினார். திருத்தந்தை 13ம் லியோ 1889ல் கத்தோலிக்கர்கள் தூய யோசேப்புவிடம் செபிக்கலாம் என்று அறிவித்தார். திருத்தந்தை 12ம் பத்திநாதர் நம் புனிதரை "தொழிலாளர்களின் பாதுகாவலர்" என பிரகடணப்படுத்தினார். திருத்தந்தை 23ம் அருளப்பர் இவரது திருப்பெயரை திருப்பலியில் சேர்த்தார். திருத்தந்தை பிரான்சிஸ் மூன்று நற்கருணை மன்றாட்டில் இணைத்தார். மேலும் இவரை கற்புக்கும் கல்விக்கும் நல் மரணத்திற்கும் பாதுகாவலராய் திருச்சபை அறிவித்துள்ளது. இன்னும் சிறப்பான விதமாய் இவருக்கு வருடத்தில் இரண்டு விழாக்களை எடுத்துக் கொண்டாடுகிறது.

தூய யோசேப்பு கன்னிமரியாளின் கணவர் (மார்ச் 19) தூய யோசேப்பு தொழிலாளர்களின் பாதுகாவலர் (மே 1)

இவ்விழாக்களை கொண்டாடும் நாம், அவரின் பண்புகளை முன்னோடியாக எடுத்துக் கொண்டு நமது கிறிஸ்தவ உழைப்பினை ஏற்போம். கடின உழைப்பால் வருவாய் தேடித் தங்கள் குடும்பங்களின் தேவைகளை நிறைவேற்றும் அனைத்து ஆண்கள் பெண்களுக்கு தூய யோசேப்பு ஒரு சிறந்த

முன்னோடி. அரசகுலம்-தாவீது அரசரின் வழிமரபினர். இறை இயேசுவின் வளர்ப்புத் தந்தை என்ற ஆணவம் தவிர்த்து சாதாரண ஏழையின் தொழிலாம் தச்சுத் தொழிலைக் கேவலமாய் எண்ணாது, எளிமையையும் நேர்மையையும் தூய்மையையும் கடைப்பிடித்தவர். பணத்திற்காக மட்டும் தச்சுத்தொழில் செய்யவில்லை மாறாக பிறர் வாழ தம்மையே கரைத்தவர். உழைப்பில்லையேல் உயர்வில்லை, உழைப்பவர்களின் உதவியால்தான் உலகம் வாழ்கிறது என்பதற்கு உதாரணமானார். நாம் செய்யும் தொழில் எதுவாக இருந்தாலும் நம்முடைய உண்மையான உழைப்பால் அதை மேம்படுத்த வேண்டும் என்று நமக்குக் கற்றுத்தருகிறார். திருக்குடும்பத்தின் காவலராக சிறப்பாக தலைமை தாங்கி இயேசுவை வழிநடத்தி அவரின் இறைப்பணியினைத் தொடங்குவதற்கு ஊன்று கோலாயிருந்தார்.

தன் தொழிலாம் தச்சுத் தொழிலையும் கற்றுத்தந்தார். நமக்கெல்லாம் பிள்ளைகளை வளர்ப்பதில் எடுத்துக்காட்டானார். தன் மனைவி மரியாளின்மீது சந்தேகம் தவிர்த்தார். பெண்மையின் மாண்பினை மதித்தார். நமக்கெல்லாம் முன்னுதாரணமானார். இன்றைய சமூகச் சூழலில் நம்மிடையே நிலவும் குடும்பச் சண்டைகள், பிரச்சனைகள், புரிந்துக்கொள்ளாத்தன்மை மற்றும் பல்வேறு இன்னல்கள் நம்மிடையே இல்லாமையாக்க யோசேப்பிடமிருந்து உழைப்பு, அன்பு, அமைதி, கீழ்ப்படிதல், பொறுமை, குடும்ப பொறுப்பு, அர்ப்பணிப்பு, எளிமை, நீதி, மனித நேயமிக்க இதய உணர்வுகளை நாமும் பெற்று அவரை மகிமைப்படுத்துவோம். இவ்விதமாய் நமது கிறிஸ்தவ உழைப்பின் முன்னோடியாம் யோசேப்பைப்போல் மற்றவர்க்கு முன்னோடியாயிருப்போம், முன்னிலை வகிப்போம்.

## 2. தவக்காலம் தரும் சவால்கள்

திரு. விக்டர்

இறை இயேசுவின் அன்பிற்குரியவர்களே, இந்த ஆண்டின் தவக்கால துவக்கத்தில் இருக்கிறோம். இந்த ஏழு வாரங்களில் நமது மனம் இயல்பாகவே ஆன்மீகத்தைத் தேடி திரும்பிவிடுகிறது. இந்த தவ நாட்களில் மட்டும் பலர் அனுதின திருப்பலியில் கலந்துக்கொள்வதைப் பார்க்க முடிகிறது. மக்கள் அதிகம் ஆர்வம் காட்டுகிறார்கள் என்பதற்காகவே இக்காலத்தில்தான் பங்குகளில் தியானங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் சிலுவைப்பாதை வழிபாட்டில் பெருந்திரள் கூடுகிறது. 7 கோயில் அல்லது 14 கோயில் என்று தவக்கால திருப்பயணங்கள் இந்நாட்களில் பெருகி வருவதையும் பார்க்க முடிகிறது. பல குடும்பங்களில் அசைவ உணவை உண்ணுவதில்லை. காவி உடை அணிந்துக்கொண்டு நாற்பது நாள்கள் நோன்பிருந்து பாதையாத்திரை மேற்கொள்கின்றனர். ஆண்களில் பெரும்பாலோர் மது அருந்துவதையும் தவிர்த்து வருகின்றனர். இப்படி இன்னும் பலவற்றை இந்த தவ நாட்களில் மட்டும் நமது மக்கள் செய்து வருவதை அதிகம் பார்க்கிறோம்.

இந்த மாற்றங்கள் எல்லாம் தவநாட்கள் வரைதான். உயிர்ப்பு விழாவிற்குப் பிறகு வாழ்க்கை பழைய நிலைக்கு திரும்பிவிடும். இதைத்தான் தவநாட்களில் ஒருவிதமான வாழ்க்கை என்றும் மற்ற நாட்களில் வேறுவிதமான வாழ்க்கையென்றும் பழகிப்போனோம். ஆனால் கிறிஸ்தவம் என்ன சொல்கிறது? ஒருவன் கிறிஸ்துவோடு இணைந்திருக்கும்போது அவன் புதிதாய் படைக்கப்பட்டவனாய் இருக்கிறான். பழையன கழிந்து புதியன புகுந்தன (2கொரி 5:17) என்று திருவிவிலியம் கூறுகிறது. கிறிஸ்தவ வாழ்வு என்பது சவால்கள் நிறைந்த வாழ்வாகும். மேற்கூறிய காரணங்களால் இந்த சவால்களை தவக்காலத்தில் துவங்குவது என்பது எளிது.

இன்றைய உலகில் கிறிஸ்தவர்களாகிய நமக்கும் மற்றவர்களுக்கும் கடவுள் வழிபாட்டைத் தவிர்த்து என்ன வேறுபாடு உள்ளது. மற்றவர்கள் வாழும் வாழ்க்கை முறையே நம் கத்தோலிக்க கிறிஸ்தவர்களும் வாழ்வதினால் கிறிஸ்தவத்தில் என்ன சிறப்பு இருக்கிறது? இப்படிப்பட்ட வாழ்க்கை முறையைத்தான் ஆண்டவராகிய இயேசு நமக்கு கற்பித்தாரா? இதற்காகவா இயேசு சிலுவையில் அறையப்பட்டு உயிர்நீத்தார்? இல்லை இல்லை. கிறிஸ்தவ வாழ்வு என்பது இது இல்லை. கிறிஸ்து நமக்குக் கற்றுத்தந்த வாழ்வும் இது இல்லை. கிறிஸ்து நம்மில் எதிர்பார்க்கின்ற வாழ்வும் இது இல்லை.

இப்படி ஒரு சாதாரண அதுவும் மற்ற மக்களைப்போல வாழ்வதில் என்ன சவால்கள் இருக்கின்றன? "கிறிஸ்தவம்" என்பது ஏதோ ஒரு "மதவழிபாடு" என்று நாம் நினைத்துக்கொண்டு இருக்கின்றோம். அப்படித்தான் கற்பிக்கப்பட்டும் இருக்கின்றோம். ஆனால் "கிறிஸ்தவம்" என்பது ஒரு "வாழ்க்கை முறை" கிறிஸ்து எதிர்ப்பார்க்கின்ற வாழ்வுமுறை சவால்கள் நிறைந்த போராட்ட வாழ்வாகும். "என்னைப் பின்பற்ற விரும்புகிற எவரும் தன்னலம் துறந்து தன் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும் (மத் 16:24) என்று இயேசு கூறுவதிலிருந்து நம் வாழ்வில் சவால்கள் உண்டு என்பதை உணர்த்தியிருக்கின்றார். இவற்றிலிருந்து ஒருசில சவால்களைப் பார்ப்போம்.

**சவால் 1:** "உங்கள் பகைவரிடமும் அன்பு கூறுங்கள்" உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்" இப்படிச் செய்வதனால் நீங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள்" (மத் 5:44,45). இயேசு கூறியபடி பகைவரையும் அன்பு செய்யும் மனப்பக்குவம் நம்மில் எத்தனை பேருக்கு இருக்கிறது? "பிதாவே இவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை (லூக் 23:34) என்று கூறி தன்னை சிலுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தவரையும், சிலுவையில் அறைந்தவர்களையும் மன்னிக்கும்படி பிதாவிடம் வேண்டி பிறரன்பு என்னும் கட்டளையை நிருபிக்கிறார். இந்த சவாலை ஏற்றுக்கொள்வோம் மனிதர்களாக அல்ல, மாமனிதர்களாக மாறுவோம்.

**சவால் எண் 2:** "நீங்கள் மிகுந்த கனிதந்து என் சீடராய் இருப்பதே என் தந்தைக்கு" மாட்சியளிக்கிறது (யோவா 15:8) இங்கே அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் ஆகியன ஆவியின் கனிகளாக (கலா 5:22) நம் வாழ்வில் இருக்க வேண்டுமென்று விரும்புகிறார். அதுவும் மிகுதியாகக் கொடுக்க வேண்டுமென்று ஆண்டவர் இயேசு விரும்புகிறார். கனி கொடுக்கவேண்டுமென்று ஆண்டவர் இயேசு விரும்புகிறார். கனிகொடுக்க வேண்டுமென்றால் இயேசு என்கிற திராட்சைச் செடியோடு இணைந்திருக்க வேண்டும். அவரில் நிலைத்திருக்க வேண்டும். அவரைவிட்டுப் பிரிந்து நம்மால் எதுவும் செய்ய இயலாது (யோவா 15:4,5). அவரோடு இணந்திருக்க நாம் ஒவ்வொரு நாளும் ஒருமணி நேரத்தை ஆண்டவருக்கென்று கொடுக்கின்றேன் என்று ஒவ்வொருவரும் தீர்மானம் எடுக்க வேண்டும் (புதிதாக துவங்குகிறவர்கள் கால்மணி நேரத்திலிருந்து ஆரம்பிக்கலாம் : அந்நேரத்தில் ஆண்டவரோடு உறவாடுவோம், ஆராதனைப் பாடல்கள் பாடலாம், இறைவார்த்தையைப் படிக்கலாம். இதயம் திறந்து ஒரு நண்பனிடம் பேசுவதுபோல் பேசுங்கள். இறுதியில் செபித்து நிறைவு செய்யுங்கள்). இந்த சவாலை ஏற்க தயாரா? துணிவுடன் துவங்குவோம் தூய ஆவியானவர் துணையிருப்பார்.

**சவால் எண் 3:** "மறுபடியும் பிறந்தாலன்றி எவரும் இறையாட்சியைக் காண இயலாது" என்று மிக உறுதியாக உனக்குச் சொல்லுகிறேன் (யோவா3:3). இயேசு உலகிற்கு வந்ததன் நோக்கமே நாம் யாவரும் இறையாட்சியை அடைய வேண்டும் என்பதேயாகும். இறையாட்சியில் நமக்கு ஒரு இடத்தை ஏற்பாடு செய்ய சென்றிருக்கும் இயேசு, இடம் ஏற்பாடு செய்த பின்பு திரும்பி வந்து நம்மைத் தம்மோடு அழைத்துச் செல்வதாக வாக்களித்துள்ளார் (யோவா 14:2,3). ஆனால் அந்த இறையாட்சியை அடைய வேண்டுமானால் நாம் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று ஒரு நிபந்தனையை நிறைவேற்ற வேண்டும் என்கிற கட்டாயத்தில் இருக்கிறோம். இதுதான் அடுத்த சவால்.

இப்போது நம்மிடம் எழும் கேள்வி "மறுபடி பிறத்தல் என்றால் என்ன? இதைத்தான் மீட்பு என்றும், இரட்சிப்பென்றும், புதுவாழ்வென்றும் சொல்லுகிறோம். இது ஏதோ ஒரு செயல் அல்ல மாறாக மூன்று செயல்பாடுகள் கொண்ட அனுபவம் ஆகும்.

முதலாவதாக யாவரும் கடவுளின் பார்வையில் பாவிகள் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். யோவான் சொல்லுகிறார் "நமக்குள் பாவம் இல்லை என்று சொல்வோமானால் நம்மை நாமே ஏமாற்றிக்கொள்கிறோம்" (1யோவா 1:8).

இரண்டாவதாக இந்த பாவியை அதாவது என்னை மீட்பதற்காகத்தான் இயேசு உலகத்திற்கு வந்தார் என்று விசுவசிக்க வேண்டும்.

மூன்றாவதாக இந்த ஆண்டவர் இயேசுவிடம் நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டு பாவ மன்னிப்பின் உறுதியை பெற்றுக்கொள்ள வேண்டும் (நீதி 28:13). இந்த மூன்று அனுபவங்களும் இணைந்ததுதான் "மறுபடி பிறத்தல்" என்பதாகும். ஒருவர் மறுபடியும் பிறந்துவிட்டாரா? இல்லையா? எப்படி அறிந்துக்கொள்வது? கீழ்க்கண்ட ஐந்து அடையாளங்களும் ஒருவரிடம் இருக்குமென்றால் அவர் மீட்பின் அனுபவத்தில் அல்லது மறுபடி பிறந்த அனுபவத்தில் இருக்கிறார் என்று சொல்ல முடியும்.

**அடையாளம் 1:** அவரிடத்தில் எப்பொழுதும் ஒரு மகிழ்ச்சியிருக்கும். வாழ்வின் சூழ்நிலைகள் பாதகமாக இருக்கலாம், போராட்டங்கள் இருக்கலாம், வளமான வாழ்வு இல்லாமல் இருக்கலாம், ஆனால் அவர் உள்ளத்திலும், முகத்திலும் எப்பொழுதும் மாறாத மகிழ்ச்சி இருக்கும். இதுதான் முதல் அடையாளம்.

**அடையாளம் 2:** இவர் ஆண்டவர் விரும்பும் செயல்களை மட்டுமே செய்வார்.

**அடையாளம் 3:** இவர் ஆண்டவர் விரும்பாத எதையும் செய்யமாட்டார்.

**அடையாளம் 4:** இவர் மற்றவர்களுடன் நல்ல சகோதர உறவுடன் அன்பு செய்து வாழ்வார். பகை என்பதே இவரிடம் இருக்காது. (1யோவா 4:20)

**அடையாளம் 5:** இவர் ஆண்டவரின் நற்செய்தி அறிவிப்பு பணியை நிச்சயம் செய்வார்.

இந்த ஐந்து அடையாளங்களும் இருந்தால் அவர் "மறுபடி பிறந்துள்ளார்" அல்லது மீட்பின் பாதையின் துவக்கத்தில் இருக்கிறார் என்று சொல்ல முடியும்.

சவால்கள் என்றாலே போராட்டம் உண்டு போராட்டம் என்றாலே காயங்களும் உண்டு, போராட்டம் இல்லாமல் வெற்றி கிடையாது. ஆண்டவருக்கான சவால் அதற்காக போராட்டம் என்றாலே ஆண்டவர் நம்மோடு இருப்பார், வெற்றியையும் தருவார்.

எனவே சவால்களை சந்திப்போம்
சாதனையாளர்களாக மாறுவோம்
போராட்டத்தில் சோர்ந்துபோகாதிருப்போம், இயேசு துணையிருப்பார்
பரிசுத்த ஆவியானவர் நம் அருகில்இருக்கிறார், விழித்திருப்போம், விடுதலை பெறுவோம்.

## 3. தவக்காலத்தில் குடும்பமாய் செய்யக் கூடியது என்ன?

திரு. இம்மானுவேல் ஜெயராஜ்

தவக்காலம் என்றவுடன் கத்தோலிக்கர்களாகிய நமக்கு விபூதி புதன் முதல் ஈஸ்டர் வரை நம் உணவில், உடையில் உடனே மாற்றத்தை ஏற்படுத்தி ஆலயங்களில் நடத்தப்படும் அனைத்து சடங்குகளிலும் பங்குபெற்று நம் தேவைகளுக்காக உருக்கமுடன் செபிப்பதை வழக்கமாக கடைப்பிடிக்கின்றோம். ஒரு சில ஆடவர்கள் புகைபிடிப்பது, மது அருந்துவது, மற்றும் கேளிக்கைகளில் பங்குபெறுதை தவிர்க்கின்றனர். பெண்கள் ஒருபிடி அரிசி என்று சேமித்து ஆலயத்தில் காணிக்கையாக தருவது, பூ பொட்டு இவற்றை தவிர்ப்பது தேவையற்ற துணிகளை தானமாக கொடுப்பது போன்றவற்றால் விண்ணக பேரின்பத்தை பெற்றுவிடுவோம் என்ற மனநிலையில் வாழ்கின்றனர்.

நாம் விவிலிய மதிப்பீடுகளின்படி வாழ்வதை ஊதாசீனப்படுத்துகின்றோம் (லூக். 10: 25-37). எவ்வாறு நாம் நிலைவாழ்வை பெறமுடியும் என்பதையறிந்து கொள்ளலாம். எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனை நேசிப்பதும், நாம் நம்மை நேசிப்பதுபோல் நம் அயலானை நேசிக்க வேண்டும் என்பதை கூறுகிறது. நல்ல சமாரியர் உவமையில் வருகின்ற சமாரியன் மனிதநேயமுடன் எந்தவித எதிர்பார்ப்புமின்றி எவ்வாறு உதவினாரோ அவ்வாறு நாமும் நம் அயலானுக்கு உதவவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது (லூக். 10:25-37). இவற்றை வாசிக்கும்போது சக்கேயுவைப்பற்றி கூறப்பட்டுள்ளது. சக்கேயுவின் தாழ்ச்சி, இயேசுவை காண அவர் காட்டிய ஆர்வம் இயேசுவை கவர்ந்திழுத்தது. இயேசு அவரை அன்னார்ந்து

பார்த்து பெயர் சொல்லி அழைக்கின்றார். இயேசுவே முன்வந்து சக்கேயுவிடம் "இன்று உமது வீட்டில் நான் தங்க வேண்டும்" என்கின்றார்.

இயேசுவின் வார்த்தைகளினால் முற்றிலும் மாற்றம் பெற்ற சக்கேயு தன் பாவங்களுக்கு பரிகாரமாக ஒன்றுக்கு நான்கு மடங்காக தன் உடைமைகளை தருவதாகவும் தன் சொத்தில் பாதியை ஏழைகளுக்கு கொடுப்பதாகவும் உறுதியெடுக்கின்றார். பாவம்போக்கும் பலியாக பெரும் தியாகத்தை செய்ததால் இயேசு "இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று" என்று சக்கேயுவிற்கும் அவருடைய சந்ததியினருக்கும் ஆசி வழங்குகின்றார்.

மூன்றாவதாக, மத். 15:21-28ல் கானானியப் பெண்ணின் நம்பிக்கை படம் பிடித்து காட்டப்படுகின்றது. தன் மகளுக்கு உதவ மனமில்லாத இயேசுவின் கடின வார்த்தைகளைக் கொண்டே தன் மகள்மீது இரக்கம் வரவழைத்து தன் மகளின் பிணியிலிருந்து இயேசு அவளை குணமாக்க வைத்ததுமின்றி இயேசு அப்பெண்ணைப் பார்த்து "அம்மா, உமது நம்பிக்கை பெரிது" என்று பாராட்டையும் கூறவைத்த கானானியப் பெண்ணைப்போல் நாமும் செபிக்க வேண்டும்.

நான்காவதாக, (தெச 1: 2) நாம் நற்செய்தியை அறிவிக்கும் பணியை நம் கடமையென கொண்டு செயல்படும்போது நாம் அதனால் அடையும் துன்பங்கள், இழிவுகள், எதிர்ப்புகள் இவற்றை எதிர்கொள்ள துணிவு இன்றியமையாதது. நாம் நம் பேச்சில், செயலில், போலிகளை தவிர்க்க வேண்டும். பொருள் சேர்ப்பது, சொகுசாக வாழ்வது, தீய வாழ்வு வாழ்வது என்று தன்னலத்துடன் வாழாமல் இயேசுவைப்போல் தாயுள்ளத்துடன், பரிசுத்தமாக நற்செய்தியை அன்புடனும், ஆவலுடனும் பாடுகளையேற்று பிறருக்கு பகிரவேண்டும். நம் உணவு, உறைவிடம், உடை இவற்றிற்காக பிறரை எதிர்பார்த்து வாழாமல் நாம் இரவுப்பகலாய் வேலை செய்து நம் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். இயேசுவால் மனம்மாறிய பவுல் தன்னுடைய பழைய சவுலின் வாழ்வை முற்றிலுமாக கலைந்துவிட்டு நற்செய்திக்காக எவ்வாறு துன்பங்களை ஏற்று தன்னை வெறுமையாக்கி, உலகை குப்பையென மதித்து இறைப்பணி செய்தாரோ அதுப்போல் நாமும் நம்மை இயேசுவின் கரங்களில் அர்ப்பணித்து இத்தவக்காலத்தை அர்த்தமுள்ளதாகவும் நம் ஆன்மா மீட்படைய பங்குபெற நாம் நம் தீய வாழ்விலிருந்து மாறுவோம். மாற்றம் பெற்ற நாம் நம் கத்தோலிக்க திருச்சபையின் குடும்பங்களில் மாற்றத்தை உருவாக்குவோம்.

## 4. திருச்சபை செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன்

பெண்கள் இல்லையெனில் இவ்வுலகில் நல்லிணக்கம் இருக்காது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தூய மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் வழங்கிய மறையுரையில் கூறினார். ஆணும், பெண்ணும் வேறுபட்டவர்கள் என்றாலும், ஒருவர் மற்றவரைவிட உயர்ந்தவர் அல்ல என்பதையும், இவ்வுலகில் நல்லிணக்கத்தைக் கொணர்வது பெண்களே என்பதையும் தெளிவுப்படுத்தினார் திருத்தந்தை. இன்றைய உலகில், பெண்கள் பல வழிகளில் கொடுமைகளுக்கு உள்ளாவதை சுட்டிக்காட்டியத் திருத்தந்தை ஆண், பெண் சமநிலையையும் நல்லிணக்கத்தையும் குலைப்பது, ஒரு குற்றம் என்று எடுத்துரைத்தார். நற்செய்தியில் இடம் பெற்றுள்ள சிரிய பெனிசிய இனத்தைச் சேர்ந்த பெண்ணைக்குறித்துப் பேசியத் திருத்தந்தை, அப்பெண் காட்டிய நம்பிக்கையும், துணிவும் இறைவன் அவருக்கு வழங்கிய கொடைகள் என்று சுட்டிக்காட்டினார்.

அன்னியருக்கு அன்புக் காட்டுங்கள் ஏனெனில் எகிப்தில் நீங்களும் அன்னியராய் இருந்தீர்கள் என்று விவிலியம் கூறும் அறிவுரைக்கு முரணாக அரசுத்தலைவர் டொனால்டு டிரம்ப் அவர்களின் அண்மைய அரசாணை உள்ளது என்று, அமெரிக்க ஐக்கிய நாட்டில் பணியாற்றும் இயேசு சபையினரின் இரு மாநிலத் தலைவர்கள் இணைந்து ஓர் அறிக்கையை பிப்ரவரி 1ம்

தேதி வெளியிட்டுள்ளனர். ஏழு இஸ்லாமிய நாடுகளைச் சேர்ந்த இஸ்லாமியர் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குள் நுழைவதற்கு அனுமதி மறுத்து, அரசுத் தலைவர் டிரம்ப் அவர்கள் அண்மையில் வெளியிட்டுள்ள அரசாணையைக் கண்டனம் செய்து, கலிபோர்னியா, மற்றும் ஒரேகான் மாநிலங்களின் இயேசு சபைத் தலைவர்கள் இவ்வறிக்கையை வெளியிட்டுள்ளனர். டிரம்ப் அவர்கள் வெளியிட்டுள்ள இவ்வாணையின் விளைவாக ஆயிரமாயிரம் பெண்களும், குழந்தைகளும் போரின் கொடுமைகளுக்கு மீண்டும் உள்ளாக்கப்படுகின்றனர் என்றும், இவ்வாணை கிறிஸ்தவ மற்றும் அமெரிக்க பாரம்பரியத்திற்கு இழைக்கப்பட்டுள்ள அவமானம் என்றும் இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. வேற்றுமைகள் வளர்ந்துவரும் இன்றைய உலகில் சுவர்களைக் கட்டுவதற்குப் பதில், பாலங்கள் அமைப்பதில் இயேசு சபையினர் இன்னும் தீவிர முயற்சிகள் மேற்கொள்வர் என்பதை, Scott Santarosa, மற்றும் Michael Weiler என்ற இரு மாநிலத் தலைவர்களும் இவ்வறிக்கையில் வலியுறுத்தியுள்ளனர்.

இந்திய ஆயர் பேரவையின் உயர் பொறுப்பாளர்களாக பணியாற்றும் கர்தினால் பசிலியோஸ் கிளிமிஸ், கர்தினால் ஜார்ஜ் ஆலஞ்சேரி மற்றும் கர்தினால் ஆசுவால்டு கிரேசியஸ் ஆகியோர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை சந்தித்தனர் என்று இந்திய ஆயர் பேரவையின் அறிக்கையொன்று கூறுகிறது. இந்திய ஆயர் பேரவையின் தலைவரான கர்தினால் கிளிமிஸ் அவர்களின் தலைமையில் இப்பேரவையின் பொறுப்பாளர்கள் பிரதமர் மோடியைச் சந்தித்து, ஏமன் நாட்டில் கடத்தப்பட்டுள்ள அருள்பணி டாம் உழுன்னலில் அவர்களின் விடுதலைக்கென அரசு தீவிர முயற்சிகள் எடுக்குமாறு கேட்டுக்கொண்டனர் என்று இவ்வறிக்கை கூறுகிறது. அருள்பணி டாம் உழுன்னலில் அவர்களின் விடுதலையை உறுதி செய்வதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும் இந்திய அரசு எடுத்துவருவதாக, பிரதமர் மோடி இச்சந்திப்பில் கூறியுள்ளார். மேலும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்தியாவில் பயணம்மேற்கொள்வதை வரவேற்கும் மனநிலை, அரசிடம் உள்ளது என்றும், கிறிஸ்தவ ஆலயங்களுக்கு, தேவையான அனைத்து பாதுகாப்பையும் அரசு வழங்கும் என்றும், பிரதமர் மோடி அவர்கள் உறுதியளித்துள்ளார் என்று, இந்திய ஆயர் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

CCBI என்ற இந்திய இலத்தீன் வழிபாட்டு முறை ஆயர் பேரவையின் புதிய உதவி தலைவராக சென்னை மயிலைப் பேராயர் ஜார்ஜ் அந்தோணிசாமி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இந்தியாவின் போபாலில் நடைபெற்ற CCBI ஆயர் பேரவையின் 29வது நிறையமர்வு கூட்டத்தில் இப்பேரவையின் புதிய தலைவராக மும்பை பேராயர் கர்தினால் ஆசுவால்டு கிரேசியஸ் அவர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இப்பேரவையின் புதிய பொதுச் செயலாளராக, டெல்லி பேராயர் அனில் ஜோசப் தாமஸ் கூட்டோ அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களின் பணிக்காலம் ஈராண்டுகள் ஆகும். CCBI ஆயர் பேரவையின் தலைவராகப் பணியாற்றி வந்த கர்தினால் கிரேசியஸ் அவர்கள், மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு அதன் தலைவராக அனைத்து ஆயர் பிரதிநிதிகளாலும், ஒரே மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என அப்பேரவையின் பேச்சாளர் தெரிவித்தார். ஆசிய ஆயர் பேரவைகள் கூட்டமைப்பின் தலைவராகவும் பணியாற்றுகிறார் கர்தினால் கிரேசியஸ்.

மதசார்பற்ற நாடு என்று அழைக்கப்படும் இந்தியாவுக்கு, அடிப்படைவாதமே பெரும் ஆபத்தாக அமைந்துள்ளது என்று, பேராயர் ஜார்ஜ் அந்தோணிசாமி அவர்கள் கூறினார். இந்திய இலத்தீன் வழிபாட்டுமுறை ஆயர்களின் 29வது நிறையமர்வு கூட்டத்தில் திருப்பலி நிறைவேற்றிய சென்னை மயிலைப் பேராயர் அந்தோணிசாமி அவர்கள், பிறரைக் கண்டனம் செய்வோரைக்

குறித்து நற்செய்தியில் கூறப்பட்டுள்ள வார்த்தைகளை மையப்படுத்தி, மக்களைக் கண்டனம் செய்வதற்கல்ல, மாறாக, அவர்களைக் குணமாக்கவே நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என்று ஆயர்களிடம் எடுத்துரைத்தார். கடவுள் நான் காணும் பொருள்களில் இல்லை, மாறாக பொருள்களைக் காணக்கூடிய என் விழிகளில் கடவுள் இருக்கிறார் என்று பக்தர் ஒருவர் கூறியதை தன் மறையுரையில் நினைவுகூர்ந்த பேராயர் அந்தோணிசாமி அவர்கள் நாம் காண்பதனைத்திலும் காணும் மனிதர் அனைவரிலும் இறைவனைக் காணும் கண்ணோட்டத்தை நாம் பெறவேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

## அடுத்த சுடரில்

தவக்கால ஞாயிறுகள்
சிலுவைப் பாதைகள்
குருத்து ஞாயிறு
பெரிய வியாழன்
பெரிய வெள்ளி
பெரிய சனி
உயிர்ப்பின் ஞாயிறு
பாஸ்கா கால ஞாயிறுகள்
புனித மாற்கு
புனித லூயி தெ மரி மான்போர்ட்
புனித சியென்னா கத்ரீன்

## பகுதி 2: விசுவாசத்தில் வளர...

திருப்பலியும் கிறிஸ்தவ வாழ்வும்-பெரிய வியாழன் தரும் பாடங்கள்

உண்மையான அன்பும் தியாகமேற்கும் குணமும்-பெரிய வெள்ளி சிந்தனை

உயிர்ப்பும் இன்றைய வாழ்வும்

திருச்சபை செய்திகள்

## சுடர் வாசகர் போட்டி 32 சரியான விடைகள்

1. நாற்பது நாட்களுக்கு பிறகு
2. தூய அருளானந்தர்
3. கொன்சாலோ கார்சியா
4. தூய ஜோஸ்பின் பக்கித்தா
5. தூய ஸ்கொலாஸ்திக்கா
6. பவிகளுக்காக மன்றாட பணித்தார்
7. நீர் ஊற்றுக்கு
8. தூய பிளேஸ்
9. கிறிஸ்துவுக்காக எங்களை கொல்பவர்களை மன்னிக்கிறேன்
10. தூய ஜோஸ்பின் பக்கித்தா
11. தூய ஆசிர்வாதப்பர்
12. தூய பீட்டர் தமியான்
13. கற்பு, ஏழ்மை, கீழ்ப்படிதல்
14. 28பேர்
15. பொதுத்தீர்வை

**பரிசு பெற்றவர்கள்**

அ. பிரின்சி, திருச்சி
சகோ. எட்வின், தூத்துக்குடி
சகோ. தமிழ்ச்செல்வி, புதுக்கோட்டை

**சுடர் வாசகர் போட்டி 33**

1. கி.பி.10ஆம் நூற்றாண்டில் மேல்திசை நாடுகளின்படி தூய யோசேப்பின் திருவிழா எந்த நாளில் கொண்டாடப்பட்டது?
2. "நாம் தொழுகை நடத்தும் இடம் மட்டுமல்ல நாம் உழைக்கும் இடமும் புனிதமானது" கூறியது யார்?
3. தூய யோசேப்பு கடவுளின் திருவுள்ளத்தை எப்படி தாங்கினார்?
4. திருச்சபையின் பாதுகாவலராக தூய யோசேப்புவை பிரகடணப்படுத்தியவர் யார்?
5. "இவ்வுலகத்தில் நல்லிணக்கத்தை கொணர்வது பெண்களே" கூறியது யார்?
6. "மக்களை கண்டனம் செய்ய அல்ல குணமாக்கவே அழைக்கப்பட்டுள்ளோம்" யார்? யாருக்கு கூறியது?
7. நமக்கு வரும் சோதனைகளில் நம்மை மட்டுமே நம்பியிராமல் யாரை நம்பவேண்டும் என்று ஆசிரியர் கூறுகிறார்?
8. "தந்தையே இவர்களை மன்னியும் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை" திருவிவிலியத்தில் எங்குள்ளது?
9. தவக்காலத்தில் எந்த இருவரின் திருவிழாவை கொண்டாட திருச்சபை பணிப்பதாக ஆசிரியர் கூறுகிறார்?
10. கி.பி. 431ல் நடந்த எந்த சங்கம் மரியாளின் மங்கள வார்த்தை திருவிழாவை கொண்டாட பணித்தது?
11. "உழைப்பது மனித நீதி" திருவிவிலியத்தில் எங்குள்ளது
12. நாணயத்தின் இருபக்கங்களாக தூய யோசேப்பு கட்டுரை ஆசிரியர் எதைக் கூறுகிறார்?
13. "மறுபடியும் பிறந்தாலன்றி எவரும் இறையாட்சியை காண இயலாது" திருவிவிலியத்தில் எங்குள்ளது?
14. CCBI இந்திய இலத்தீன் வழிபாட்டு முறை ஆயர் பேரவையின் தற்போதைய உதவி தலைவர் யார்?
15. சுயநலத்தால், அதிகாரத்தால், ஆணவத்தால் நம் மனது எப்படியிருப்பதாக ஆசிரியர் கூறுகிறார்?